★ விலை ரூபா 1.25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

1959 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 25 மார்கழி 12 ரபி. அவ் 21 இதழ் 315
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 27-12-83
செவ்வாய்க்கிழமை

## கொள்ளைச் சம்பவங்கள்: சுயநலமே காரணம்

யாழ். பொலிஸ் அதிபர் கருத்து

(யாழ்ப்பாணம்)

'யாழ். மாவட்டத்தில் நடந்த அண்மைக்காலக் கொள்ளைச் சம்பவங்களில் அதிகமானவை சுயநலன் கருதியே நடத்தப்பட்டுள்ளன' என்று யாழ். பொலிஸ் அதிபர் திரு. ரி. ஈ. ஆனந்தராஜா விடுத்துள்ள செய்தியில் கூறியுள்ளார்.

அண்மையில் நடந்த கொள்ளைகள் பற்றி ஆராய்ந்த போது, கொள்ளையர்கள் தமது சொந்த நலன்களின் பொருட்டும், வெளிநாடு செல்ல பணம் பெறும் வகையிலுமே கொள்ளையிலீடு பட்டுள்ளதை அறிய முடிந்துள்ளதாக பொ

(8-ம் பக்கம் பார்க்க)

★ தமிழர்பிரச்னை பற்றிய சர்வகட்சி மகாநாடு ★

# ஜனாதிபதி-முஸ்லிம்பிரமுகர்குழு முதற்தடவையாக சந்திப்பு!

## வடக்கு-கிழக்குஇணைப்புக்கு கடுமையான எதிர்ப்பு

### முஸ்லிம்கள் சார்பில் மஜீத் அழைக்கப்படலாம்

(நமது சிறப்பு நிருபர்)

"வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதை கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் விரும்பவில்லை. இவ்விஷயத்தில் கிழக்குவாழ் முஸ்லிம்களை எந்தவிதத்திலும் வற்புறுத்த வேண்டாம்" என்று முஸ்லிம் பிரமுகர்கள் குழுவொன்று ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

பிரதி அமைச்சர் ஜனாப் அப்துல் மஜீத், பொத்துவில் எம். பி. ஜனாப் உதுமா லெப்பை, பிரதி அமைச்சர் பரீத் மீரா லெப்பை மாவட்ட அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர் ஆகியோர் தலைமையில் சென்ற முஸ்லிம் பிரமுகர்குழுவே ஜனாதிபதியிடம் மேற்படிக் கோரிக்கையைச்சமர்ப்பித்துள்ளது.

இச்சந்திப்பு கடந்த சனிக்கிழமைஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

ஜனவரி மாதம் பத்தாம்

(8-ம் பக்கம் பார்க்க)

## 6 இளைஞர்களும் பிணையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில், பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம் வெளியில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 6 இளைஞர்களும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. வரதராசா முன்னி

(8ம் பக்கம் பார்க்க)

## ஜி. ஸி. ஈ. பரீட்சை பொலிஸ் அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஜி. ஸி. ஈ. சாதாரண தரப் பரீட்சை மண்டபங்களுக்கு வெளியே நடமாடுவதை இளைஞர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும், என்று யாழ். பொலிஸ் அத்தியட்சகர் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பகுதிகளிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் இதுபற்றிய பணிப்

(8-ம் பக்கம் பார்க்க)

## சட்டத்தரணி புள்ளநாயகம்காலமானர் "தமிழ் மக்களுக்கு பேரிழப்பு" ஆலால், நீலன் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

'தமிழ்மக்களின் பிரச்னைகள் அனைத்திலும் தமது பங்களிப்பைச் செய்த பெரியாரான சிரேஷ்ட சட்டத்தரணி புள்ளநாயகம் மறைவு தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும்''

சிரேஷ்ட சட்டத்தரணி வி. எஸ். ஏ. புள்ளநாயகம் மறைவு குறித்து தமிழர் விடுதலைக்கூட்டணியின் அமைப்புச் செயலாளரும் கோப்பாய் எம். பி. யுமான திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில்

(8ம் பக்கம் பார்க்க)

## மன்னர் பஸ் டிப்போவில் ரூ. 48,000 கொள்ளை!

(மன்னார்)

மன்னார் இ. போ. ச. பஸ் டிப்போவில் துணிகரக்கொள்ளைச்சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

ஆறு இளைஞர்கள் துப்பாக்கிகள் சகிதம் நள்ளிரவு நேரத்தில் 47 ஆயிரத்து 998 ரூபா 90 சதத்தை இங்கு கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்!

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது: "கொள்ளையர்கள் முதலில் மன்னார் டிப்போ உதவி முகாமையாளரான கே. நவரத்தினம் என்பவரது வீட்டுக்குச்சென்றனர். அங்கு அவரை துப்பாக்கி முனையில்

(8-ம் பக்கம்பார்க்க)

## ★ வல்வையிலுள்ள திக்கத்தில் நடந்தது கடலுக்குள் மோட்டார் சைக்கிள் பாய்ந்தது! கான்ஸ்டபிள் பலி!!

(பருத்தித்துறை நிருபர் எஸ். திருச்செல்வம்)

கடலுக்குள் பாய்ந்த மோட்டார் சைக்கிளை ஓட்டிக் கொண்டு வந்த பொலிஸ் கான்ஸ்டபிள் துடிதுடித்து மாண்டார்! பின்னால் ஆசனத்தில் இருந்த மற்றொரு கான்ஸ்டபிள் உயிர் தப்பிவிட்டார்!

நேற்று முன்தினம் இரவு நெல்லியடியிருந்து திக்கம் வீதியினூடு மோட்டார் சைக்கிளை வேகமாக ஓட்டிக் கொண்டு வந்து கொண்டிருந்த வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த நடராஜா தர்மராஜா என்ற இருபத்தேழு வயது கான்ஸ்டபிள் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வல்வெட்டித்துறை ரோட்டுக்குத்திருப்ப முடியாத நிலையில் நேரடியாக மோட்டார் சைக்கிளை விட்டதால் அது கடலுக்குள் பாய்ந்

( 8ம் பக்கம் பார்க்க

## ● மினிபஸ் மோதி ஒருவர் பலி

# ஆத்திரமடைந்த மக்கள் பஸ்ஸுக்கு தீ வைத்தனர்!

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கட்டுடையில் நேற்று இடம்பெற்ற சைக்கிள் மினிபஸ் விபத்தில் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர் ஸ்தலத்திலேயே பலியானார். ஆத்திரமடைந்த பொது மக்கள் மினிபஸ்ஸைத்தீக்கிரையாக்கினர் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சைக்கிளில் சென்று கொண்டிருந்த மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை ஆண்தாதியான எஸ். செல்வநாதனை மினிபஸ் ஒன்று மோதியதில் அவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

சிலநிமிடங்களில் அங்கு கூடிய பொழுது மக்கள் ஆத்திரமடைந்து அவரை மோதிய மினி பஸ்ஸுக்கு தீயிட்டுக் கொளுத்தினர் என்று கூறப்

(8ம் பக்கம் பார்க்க)

## ராணுவம் சுட்டதில் கான்ஸ்டபிள் மரணம்

(திருகோணமலை)

ராணுவம் சுட்டதில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மரணமானர்! திருகோணமலைபிரட்றிக் கோட்டைக்குள் நத்தார் தினத்தன்று இரவு பதினொரு மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

பொலிஸ் ஜீப்பொன்றில் உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் தலைமையில் வந்து கொண்டிருந்த போது அங்கு காவல் புரிந்து கொண்டிருந்த ராணுவ வீரர்கள், ஜீப்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள் அ

(8-ம் பக்கம் பார்க்க)

ப

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நபர்சில் வேலைசெய்வதற்கு கொம்போசிங் பழகிய ஆண்கள் தேவை. நபர்சில் வேலை பழகுவதற்கு ஆர்வமுள்ள இளைஞர் — யுவதிகள் தேவை. மாநகர எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும். தரன் ஸ்ருடியோ, நவீன சந்தை, யாழ்ப்பாணம். போன்: 23858 (10742)

---

யாழ். கொன்வென்ற் வீதியில் 2½ பரப்புக் காணியுடன் சகல வசதியும் கொண்ட 4 அறை வீடும், கஸ்தூரியார் வீதியில் மேல்மாடியுடனான கடையும் விற்பனைக்குண்டு. தொடர்பு மலிரி சேவிசஸ், 37 (351) மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் தியேட்டர் சந்தி) யாழ்ப்பாணம். 10750

---

சாவகச்சேரி கச்சாய் வீதியில் 6 3/4 ஏக்கர் தென்னங்காணி சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 311, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (10753)

---

திருநெல்வேலி தபால்பெட்டி ஒழுங்கையில் கொக்குவில் புகையிர நிலையத்திற்கு அருகாமையில் சுற்றுமதிலும், மின்சார வசதியுமுள்ள 1½ பரப்புக் காணியும் வீடும் உடன் விற்பனைக்குஉண்டு. பங்குக்கிணறு. தொடர்பு: ம. மகிந்தன், 538, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். (10754)

---

யாழ். நகர எல்லைக்குள் 5 அறை வீட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: 12 புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். 10760

---

நல்ல இன தென்னங் கன்றுகள் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும். அன்ன பாம் இணுவில் அல்லது அன்ன பாம், குரும்பசிட்டி. 10736

---

கரம்பொன் கிழக்கு வேலணை வீதி ஊர்காவற்றுறையில் 20 பரப்பு தோட்டக்காணியுடன் வீடு, மின்சார வசதியுடன் விற்பனைக்கு உள்ளது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 10728 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 10728

---

கிளிநொச்சி நகரில் தோட்டப் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற மூன்று ஏக்கர் காணி உடன் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்புகொள்க. என். எஸ். கே. இலட்சுமணன் ஜே. பி. 274 (354), நாவலர் ரோட், நல்லூர், யாழ்ப்பாணம். (10783)

## தேவை

Telex Machine உடன் தேவை. எந்த மொடல் என்றாலும் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 10786, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். (10786)

---

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வீடு கட்ட உகந்த இரண்டு பரப்பளவிலுள்ள காணி தேவை. கடிதமூலம் தொடர்புகொள்க:- எஸ். ஆர். ஜெயராஜ, 9, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். (தரகர் வேண்டாம்.) 10785

## சேவை

எமது ஸ்ருடியோவில் வாங்கும் கலர் பிலிம் சுருள்களை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர்பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும். Processing ரூபா 30/-, P. C. Printing ரூபா 6/50. கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். 10509

---

யாழ். நகர் வீடியோ ரசிகர்களுக்காகப் புதியதமிழ்ப்படங்கள் வெளிவந்துள்ளன. உங்களை அங்கத்தவராக்கிக்கொள்ளுங்கள். சிற்றி வீடியோ கிளப், 135, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். 10593

## காணவில்லை.

கடந்த 20ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7 மணி முதல் மல்லிகா என்னும் 11 வயது சிறுமியைக்காணவில்லை. உயரம் 3 அடி. கடைசியாக பூப்போட்ட பிறவுண் நிற சட்டை அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் தயவு செய்து அண்மையிலுள்ள பொலிஸ்நிலையத்திலோ அல்லதுவல்வெட்டித்துறை ஆலடி. K R. சுப்பிரமணியம் என்பவரிடமோ அறியத்தரவும். சன்மானம் வழங்கப்படும். (10766)

---

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

## வியாபாரிகளுக்கு சலுகை

லீலா, மெய்கண்டான் மற்றும் கலண்டர்கள், டயறிகள்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
கொழும்பு விலைகளுக்கு கமிஷன் வழங்கப்படும்.

**பூபாலசிங்கம் புத்தகசாலை,**
04, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
போன் : 23631.

---

## நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன்கோவில் அறிவித்தல்

டி கோவில் அறங்காவலர்சபையோ அல்லதுமாவட்ட நீதிமன்றமோ, இக்கோவில் சார்பாக, பிரதமகுரு, ஆதீன பிரதமகுரு என்ற பதவிகளுக்கு எவரையும் நியமிக்கவில்லை. இவ்வித பட்டங்களைத் தமது சுய நலனுக்குப் பயன்படுத்துவோர்மீது கடும் நடவடிக்கை எடுககப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
அறங்காவலர் சபை

[10788]

---

## அகதிகள் திரும்புகின்றனர்

(சாவகச்சேரி)

கைதடி அகதிகள் முகாமில் தங்கியிருந்த 323 குடும்பங்களில் 61 குடும்பங்கள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உதவிப் பணத்தினைப் பெற்றுக் கொண்டு தமது முன்னைய இடங்களுக்குத் திரும்பிச்சென்றுள்ளனர்.

திரும்பிச்சென்ற ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா 1000 ரூபாவும், வியாபாரம் செய்தவர்களுக்குத் தலா 2,500 ரூபாவும் சமூகசேவைகள் உதவிப் பணிப்பாளர் திரு. என். அமிர்தசாகரனால் வழங்கப்பட்டது.

## 6 இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (சாதாரண) பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த பாடசாலை வளவுக்குள் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதாகக் கருதப்படும் ஆறு இளைஞர்களைப் பொலிசார் கைதுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் யாழ். நீதிமன்ற நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது றிமாண்டில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்.

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வளவுக்குள் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் பல இளைஞர்கள் நடமாடிக்கொண்டிருந்தனராம். யாழ். பொலிசார் விடைத்தாள்களைப் பொறுப்பேற்று விறுத்தாள்களைக் கொடுப்பதற்காக பஸ் ஒன்றில் அப் பாடசாலைக்குச் சென்றபோது இளைஞர்கள் தப்பிஓடவே, அவர்களில் ஆறுபேரை கைது செய்ததுடன் அவர்களது நான்கு சைக்கிளையும் பொலிசார் கைப்பற்றிக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

---

## உடன் தேவை

### தலைமன்னார் ஐஸ் தொழிற்சாலைக்கு

அ. அனுபவமும், ஆற்றலுமிக்க முகாமையாளர்
(ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்)

ஆ. அனுபவமுள்ள இயக்குனர்களும் (5 பேர்)

உடனடியாகத் தேவை
09-01-1984-ம் திகதிக்கு முன்பதாக
பணிப்பாளர்,
பிரதேச அபிவிருத்தி,
244, காலி வீதி, த. பெ. இல: 1700, கொழும்பு-4
என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.

(10767)

---

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

## பதவி வெற்றிடங்கள்

1. நிறைவேற்று அலுவலர்
2. கணக்காளர்

**அ. கல்வித்தகைமைகளும் அனுபவமும்:**

க. பொ. த. ப. (உயர்தரப்) பரீட்சையில், வர்த்தகமும் நிதியும், கணக்கியல், பொருளியல், தூயகணிதம், பிரயோக கணிதம் ஆகிய பாடங்களில் குறைந்தது இரண்டு பாடங்களுட்பட, நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்கவேண்டும். அத்துடன் குறைந்தது நான்கு வருட தொழில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

மேற்குறித்த கல்வித்தகைமைக்கு மேலான ஏதேனும் கல்வித்தகைமையுடன் இரண்டு வருட தொழில் அனுபவம் பெற்றிருத்தல்வேண்டும்.

அல்லது

க. பொ. த. (சாதாரணப்) பரீட்சையில் தமிழ் மொழி, எண்கணிதம்/தூயகணிதம்/வர்த்தக எண் கணிதம் ஆகிய பாடங்களிலும், வேறு ஏதேனும் மூன்று பாடங்களிலும் திறமைச்சித்தியுடன், ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருப்பதோடு குறைந்தபட்சம் பத்து வருட தொழில் அனுபவம் பெற்றிருத்தல்வேண்டும்.

**ஆ. வயது:**

விண்ணப்ப முடிவு தேதியன்று முப்பது வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**இ. சம்பள விபரம்:**

1. நிறைவேற்று அலுவலர்:- 900-20X20—1300
2. கணக்காளர்:- 800-20X20—1200

(சகல படிகளும் உட்பட)

**ஈ. முக்கிய கவனிப்பு:**

சைவசமயிகளுக்கும், ஆங்கில மொழி அறிவு, தமிழ்த்தட்டெழுத்தில் தேர்ச்சி ஆகியன உடையவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

**உ. பிணைப்பணம்:**

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ரூபா ஐயாயிரம் காசாகவும், பத்தாயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த ஆதனத்தையும் பிணை தரத்தயாராக இருத்தல்வேண்டும். அறங்காவலர் சபையினர் தீர்மானிக்கும் வீதப்படி காசுப்பிணைக்கு வட்டி வழங்கப்படும்.

**ஊ. விண்ணப்பிக்கும்முறை:**

விண்ணப்பங்கள் யாவும் கோவில் அலுவலகத்தில் நேரிலும் தபால் மூலமாகவும் பெறக்கூடிய விண்ணப்பப்படிவங்களில் தயாரிக்கப்பட்டு 10-01-84 செவ்வாய்க்கிழமைக்குப் பிந்தாமல் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபாலில் எனக்கு அனுப்பப்படவேண்டும். அறங்காவலர் சபை நியமிக்கும் நேர்முகப்பரீட்சைக் குழுவினரின் முடிவே இறுதியானது.

நா. சிவராசசிங்கம்
செயலாளர்
அறங்காவலர் சபை.

23-12-83, நயினாதீவு. (10787)

---

## கடூழியச்சிறை

(யாழ்ப்பாணம்)

வீடுடைத்து வானொலி ரேப் றெக்கோடர் ஆகியவற்றை களவாடிய ஒருவருக்கு யாழ். நீதிமன்ற நீதவான் எஸ். நாகராசா ஒன்றரை வருஷக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

கொழும்புத்துறை- சுண்டிக்குளியைச் சேர்ந்த கே. வின்னராசாவின் வீட்டில் மேற்குறிப்பிட்ட பொருட்கள் களவாடப்பட்டதாக, யாழ். பொலிசில் புகார் செய்யப்பட்டிருந்தது.

விசாரணை மேற்கொண்டிருந்த பொலிசார் தாராக்குளத்தடியைச் சேர்ந்த சின்னராசா அன்ரன் சகாயராசா (22வயது) என்பவரைக் கைது செய்துபொருட்களைரும் மீட்டுள்ளனர். இவர் யாழ். நீதவான்முன் ஆஜர் செய்யப்பட்டபோது மேற்குறிப்பிட்ட தண்டனை விதிக்கப்பட்டது. (மா)

---

சண்டிலிப்பாயில்

## 10 லட்சம் வீடுகள் திட்டப் பிரசாரம்

[பண்டத்தரிப்பு]

சண்டிருப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அரசின் 10 இலட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தைப்பற்றிய பிரசாரக் கூட்டங்களை நடாத்துவதற்கான ஒழுங்குகளை வலி. தென்மேற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஆ கதிரைமலைநாதன் மேற்கொண்டு வருகின்றார்.

மேற்படி பிரசாரக் கூட்டமொன்று இன்று பிற்பகல் வடலியடைப்பு அரசடி சனசமூக நிலையத்திலும் அதனைத்தொடர்ந்து சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்திலும் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்ட வீடமைப்பு அதிகாரசபை முகாமையாளர் வலி. தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. மகாதேவா, விசேட சேவை அலுவலர் திரு. அல்பிரட் வில்லியம், அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஆ. கதிரைமலைநாதன் ஆகியோர் இதில் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

---

## சிறுவர்கள் நடத்திய கிறிஸ்மஸ் விழா

[நெடுந்தீவு]

நெடுந்தீவில் சிறுவர்கள் 'கிறிஸ்மஸ் மரம்' விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். இங்குள்ள தென்னிந்திய திருச்சபையின் சிறுவர் பராமரிப்பு நிலையம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

இந்நிலையத்தில பயிலும் ஐந்து வயதிற்கு உட்பட்ட சிறுவர் சிறுமியரின் தமிழ் ஆங்கிலப் பாடல்கள், நாட்டிய நாடகங்கள். அபிநயப்பாடல்களில் பார்வையாளர்கள் திருப்தியடைந்து பாராட்டுக்களையும் வழங்கினார்கள். சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகளை திருமதி தயாழினி தியாகராசா நெறிப்படுத்தினார். நத்தார் புதுவருடத்தையொட்டிய பரிசில்களை திருமதி ஆனல்ட் வழங்கினார் அருட்திரு தியாகராசா நன்றியுரை கூறினார்.

# 'அரபாத்' மர்மம் நீடிப்பு!

# 3 நாட்களாக தொடர்பில்லை!!

கெய்ரோ, டிச. 26

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாஸீர் அரபாத்தைப் பற்றியும், அவர் எங்கிருக்கிறார் என்பது பற்றியும் கடந்த மூன்று தினங்களாக எதுவும் தெரியாதுள்ளது. தலைவர் அரபாத் கடைசியாக கெய்ரோவில் இருந்து கப்பல் மார்க்கமாகப் புறப்பட்டிருந்தார். தற்போது அவர் எங்கிருக்கிறார் என்பது மர்மமாகவே உள்ளது.

'ஓடீஸியல் எலிட்டிஸ்' என்ற கிரேக்கக் கப்பலிலேயே அவர் கெய்ரோவிலிருந்தும் புறப்பட்டார். அவருடன் அவரது இயக்கத்தைச் சேர்ந்த வீரர்களும் அக்கப்பலில் இருந்தனர். வடயேமன் நோக்கியே அவர்கள் சென்றதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் இறுதியாகக்கிடைத்த தகவலின்படி, வடயேமனில் உள்ள பாலஸ்தீனப் பிரதிநிதி, அரபாத் இன்னும் அங்கு வரவில்லையென்றும், அவர் வருவது பற்றித் தமக்கெதுவும் தெரியாதெனவும் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. யாஸீர் சென்றகிரேக்க கப்பலுடன் தொடர்புகொள்ளும் முயற்சியும் பலனளிக்கவில்லை.

தலைவர் அரபாத், சவுதி அரேபியாவின் ஆட்சியாளர்களுடனும் தமது பிரச்னைகள் பற்றி ஆராய்வார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து அவர் சவுதி அரேபியாவில் தரை இறங்கியிருக்கலாம் எனக் கருதப்பட்டது.

இது தொடர்பாக சவுதியில் உள்ள பாலஸ்தீன பிரதிநிதியுடன்தொடர்புகொண்டபோது அவரும் அரபாத் அங்குவரவில்லையென்றே குறிப்பிட்டுள்ளார். தலைவர் அரபாத்துடனான தொடர்புகள் இவ்வாறு மர்மமானமுறையில் துண்டிக்கப்பட்டிருப்பது, பாலஸ்தீன இயக்க வட்டாரங்கள், அரபாத்தின் மீது நட்புக்கொண்டுள்ள நாடுகளிடையே பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளன.

விரைவில் முழு அளவிலான தேடுதல்களும், கண்டுபிடிப்பு நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. [கு]

## தமிழகத்தில் பெருமழை 52 பேர் மரணம்!

சென்னை, டிச. 26

தமிழ்நாட்டில் இத்தடவை கடும் மழையினால் 52 பேர் பலியாகியுள்ளனர். பரவலாக தமிழகத்தில் பல இடங்களில் இம் மரணங்கள் சம்பவித்துள்ளன.

தஞ்சாவூர் மாவட்டத்திலேயே வெள்ளத்தின் தாக்கம் அதிகமாகவுள்ளது. இங்கு சுமார் 33 பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர். இத்துடன் சில விளைநிலங்களில் மிதமிஞ்சிய நீரினால் பயிரினங்கள் பாழாகியுள்ளன.

தமிழகத்தின், வடக்கு கிழக்குப் பகுதிகளும் பலத்த மழைக்குள்ளாகின. வேலூர் மாவட்டத்தில் 120 மில்லி மீட்டர் மழைப்பொழிவு பதியப்பட்டுள்ளது. இதுபோன்று வேறுஇடங்களிலும் கணிசமானளவு மழைப்பொழிவு பதியப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப்பணிகளை துரிதமாக்கும்படி பணித்துள்ளார், நேற்று அவர் பல இடங்களுக்கு ஹெலிகாப்டரில் சென்று நிலைமைகளை அவதானித்தார். (கி)

## 44 மொழிகளில் பாப்பரசரின் கிறிஸ்மஸ் செய்தி!

வத்திக்கான், டிச. 26

பரிசுத்த பாப்பரசரின் இந்த ஆண்டு கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தி 44 உலக மொழிகளில் வத்திக்கானினால் வெளியிடப்பட்டுள்ளது.

கிழக்கு ஐரோப்பிய மொழிகளே இவற்றில் அநேகமானவையாகும். ''உலக நாடுகள் ஆயுதங்களிலும், ஏனைய நாசகார நடவடிக்கைகளிலும் செலவிடும் பணத்தை வறிய மக்களின் மேம்பாட்டுக்காகச்செலவிட்டு உலக அமைதிக்கு வழி வகுக்கவேண்டும்' என்று அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் மகாராணியார் எலிஸபெத்தும் கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியொன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் ''வறிய செல்வந்த நாடுகளுக்கிடையிலான இடைவெளி குறுகவேண்டும்'' என்று கேட்டுள்ளார். (இ)

## கினியாவில் பயங்கர பூகம்பம்: 300 பேர் பலி!

லண்டன், டிச. 26

மேற்கு ஆபிரிக்க நாடான கினியாவில் பயங்கர பூகம்பம் ஒன்று கடந்த சனிக்கிழமை ஏற்பட்டது. இதனால் 140 பேர்வரை கொல்லப்பட்டனர். இரண்டாயிரத்துக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர்.

கினியா ஆபிரிக்காவின் மேற்கு அந்தத்திலுள்ள ஒரு சிறிய நாடு. இப்பயங்கரப் பூகம்பம் மூன்று நாட்களில் இரண்டாவது தடவையாக நடந்துள்ளது. முதலாவதாக நடந்ததில் மூந்நூறுக்கும்அதிகமானவர்கள் உயிரிழந்தனர்.

சனிக்கிழமைநடந்தபூகம்பம் கினியாவின் கிழக்குப் பகுதியையே தாக்கியிருந்தது. இதனால் உயிரிழப்புக்களுடன் மக்களின் உடமைகளுக்கும் குறிப்பிடத்தக்களவு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

பல வீடுகளும், வீதிகளும் மண்ணினால் மூடப்பட்டுள்ளன. கினியா அரசாங்கம் மீட்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியுள்ளது. [கி]

## ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

மீன்பிடிவள்ள உதிரிப்பாகங்களைத் திருடியநபரை யாழ். பொலிசார் கைதுசெய்ததுடன் அவரிடமிருந்து திருடப்பட்ட பொருட்களையும் மீட்டுள்ளனர்.

நாவலர் வீதியிலுள்ள லோறன்ஸ் அலெக்சாண்டர் என்பவர் வீட்டிலிருந்து 9,800 ரூபா பெறுமதியாள மீன்பிடி வள்ள உதிரிப்பாகங்கள் திருடப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவில் புகார் செய்யப்பட்டிருந்தது.

குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி திரு ஸ்ரீதரன் தலைமையில் சென்ற பொலிசார் சுப்பிரமணியம் குமார் (25 வயது) என்பவரைச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து விசாரணை செய்ததுடன், திருடப்பட்ட பொருட்களையும் மீட்டுள்ளனராம்.

இவர் தொடர்ந்து விசாரணைக்காக றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். (மா)

## போதைவஸ்த்து கடத்தல்

## ஈரானில் பதினாறு பேருக்கு தூக்குத் தண்டனை!

தெஹ்ரான், டிச. 26

ஈரானில் பதினாறு பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும்போதைவஸ்த்து வியாபாரத்தில்ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

ஈரானில் போதைவஸ்த்துப் பாவனை, கடத்தல் ஆகியவற்றுக்கெதிராகக் கடும் நடவடிக்கைகள் அண்மைக்காலங்களில் எடுக்கப்பட்டுவருகின்றன.

தூக்கிலிடப்பட்ட அப்பதினாறு குற்றவாளிகளும் பிரபல போதைவஸ்துக் கடத்தல்காரர்களாவர். இவர்கள் அனைவரும் ஈரானியர்கள். 'ஹிரோய்ன்' என்ற போதைவஸ்த்தினையே இவர்கள்கடத்தி வந்துள்ளனர்.

சர்வதேச ரீதியாகவும் இவர்கள்இயங்கி வந்துள்ளனர். அத்துடன் [ஈரானையே இவர்கள் தமது கடத்தல் நடவடிக்கைகளுக்கு கேந்திர நிலையமாகப் பயன்படுத்தியுள்ளனர். முன்பும் பல தடவைகள் கடும் தண்டனைகளைப் போதைவஸ்த்துக்களுடன் தொடர்புடையவர்களுக்கு ஈரான் விதித்துள்ளது. [கி]

## கோப்பாய் எம். பி. பதவி: ஜன. 19-ல் காலாவதி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் எம். பி. பதவி அடுத்த வருடம் ஜனவரி 19ம் திகதியே காலியாகும் என்றும், அதுவரை, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான. வசதிகள் தொடர்ந்து இருக்கும் என்றும் கோப்பாய் எம். பி. யும், கூட்டணி நிர்வாகச் செயலாளருமான திரு. எம். ஆலாலசுந்தரம் நேற்றுத்தெரிவித்தார்.

அவர்மேலும் கூறியதாவது! ''எனது 3 மாத லீவு இம்மாதம் 27ம்திகதியுடன் முடிவடைகின்றது. இனிமேல் பாராளுமன்றம் 84 ஜனவரி 19ம் திகதி கூடவிருக்கிறது. எனது லீவு 27ம் திகதி முடிவடைந்தாலும், ஜனவரி 19ம் திகதி வரை எம். பிக்களுக்குள்ள வசதிகள் தொடர்ந்து எனக்கு இருக்கும். (க)

## 3 'ஆசாமி'களுக்கு கிடைத்த 'பரிசு'

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் பகுதியில் 3 திருடர்களை தீவிரவாத இளைஞர் கோஷ்டியொன்று கட்டிவைத்து அடித்தபோது, பொலிசார் அப்பகுதியால் ரோந்து சுற்றிவந்ததாகவும், இளைஞர் கோஷ்டி அப்போது ஓடிவிட்டதாகவும் தெரிய வருகிறது.

இத்திருடர்களை பொலிசார் கைது செய்து கொண்டுபோனதாகவும் கூறப்படுகிறது. (க)

## "பத்திரிகையாளர் குறைகள் நீக்கப்படவேண்டும்"

(வண்ணார்பண்ணை)

பத்திரிகையாளர்கள் பத்திரிகாதர்மத்தை நிலைநாட்டுவதில் முன்னணியில் திகழ வேண்டும். மக்களை நல்வழிப் படுத்தி, நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்குப் பத்திரிகைகள் சிறந்த சாதனங்களாக விளங்குவதற்குப் பத்திரிகையாளர்கள் வழி வகுக்கவேண்டும்''

இவ்வாறு, யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்களுக்கான பயிற்சிநெறி ஒன்றை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய இலங்கைப் பத்திரிகை எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் குறிப்பிட்டார். யாழ். பொன்ட் கல்வி நிலையத்தில் நடைபெற்ற இவ் வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய திரு. திருச்செல்வம் குறிப்பிட்டதாவது!

பத்திரிகையாளர்கள் வருமானத்தை மாத்திரம் நோக்கமாகக்கொண்டு பத்திரிகைத் தொழிலை மேற்கொள்ளாது மக்களினதும் நாட்டினதும் நன்மை கருதி சமூகசேவை மனப்பான்மையுடன் செயற்படும்போது பத்திரிகா தர்மத்தை சிறப்பாக நிலைநாட்ட முடியும்.

''பத்திரிகையாளர்களுக்குள் ஒழுங்கு கட்டுக்கோப்பு என்பன நிலைநிறுத்தப்படவேண்டும். பத்திரிகையாளர்கள் தமது தொழில் மகத்துவத்தையும், கௌரவத்தையும் பேணிப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். பத்திரிகையாளர்களின் முக்கிய கடமை இது என்பதை மறந்துவிடக் கூடாது இன்று பத்திரிகையாளர்களுக்குப் பலவிதமான குறைபாடுகள் இருக்கின்றன. இக் குறைபாடுகள் நீக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் பத்திரிகையாளர்கள் சிறந்த சேவையை மக்களுக்கும் நாட்டிற்கும் வளங்கமுடியும்''.

## வடமராட்சி சேத விபரம்

(புலோலி)

கடும்மழை, பலத்த காற்று காரணமாக வடமராட்சிப் பகுதியில் குறிப்பிடத்தக்களவு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

நூற்றுக்கணக்கான தென்னை, பனைமரங்களுடன் பல பெரும் மரங்களும் வேரோடு சாய்ந்து முறிந்துள்ளன. இதனால் தந்தி தொலைபேசி தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதுடன் போக்குவரத்தும் இப்பகுதியில் சீர்குலைந்துள்ளது.

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் சமூக சேவைகள் அமைச்சுக்கு நிவாரணப் பொருட்களையும், உதவிகளையும் வடமராட்சிப் பகுதிக்கு விரைந்து அனுப்பும்படி கோரியுள்ளார். அத்துடன் யாழ். அரசாங்க அதிபர், சமூகசேவைகள் பிரதிப் பணிப்பாளர் திரு. அமிர்தசாகரன் ஆகியோருக்கும் இதுபற்றி அறிவித்துள்ளார்.

இரண்டாயிரத்துக்கும் அதிகமான மக்கள் வடமராட்சிப் பகுதியில் வெள்ளத்தினாலும் பலத்த காற்றினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். வீடுகளை விட்டு வெளியேறியோர் பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்களின் அத்தியாவசிய தேவைகள் சம்பந்தமான நடவடிக்கைகளை பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், உதவி அரச அதிபர் திரு, வேலும்மயிலும் ஆகியோர் கவனித்துவருகின்றனர்.

இப்பகுதியில் கடும்மழை காரணமாக க. பொ. த. சாதாரண பரீட்சை நிலையங்கள் பலவும் பாதிக்கப்பட்டிருந்தன. அவற்றில் சிலவற்றுள் நீர் புகுந்திருந்தது. பரீட்சார்த்திகளும் மழை காரணமாக குடைகளைப் பிடித்தபடி விடை எழுதியதைக் காண முடிந்தது

(7-ம்பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவி

[சாவகச்சேரி]

யாழ். மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தினர் கைதடி அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் 261 குடும்பங்களுக்கு அலுமினிய சமையல் பாத்திரங்களையும் பெண் அகதிகளுக்குச் சேலைகளையும் சிறுவர்களுக்குத் துவாய்களையும் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

செஞ்சிலுவைச் சங்கத்தினரைக் கைதடி அகதிகள் முகாமிற்கு, முன்பும் பல்வேறுவிதமான பொருட்களை அன்பளிப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

**மணிவாக்கு**

பழக்கம் பகுத்தறிவிலும் பார்க்க பலமுடையது.
— ஜோர்ஜ் சந்தாயன

# நமது நோக்கு

## பிரசார பேராசிரியரும் பத்திரிகையாளரும்

உண்மையைக்கண்டறிவதில் பசி தாகம் கொண்டவர்களே உண்மையான பேராசிரியர்களும் பத்திரிகையாளரும்; மற்றெவர்களுக்கும் இது விதிவிலக்கென்பதல்ல.

விருப்புவெறுப்பையொதுக்கி தாம் கண்ட முடிவுகளை காரண காரிய ரீதியில் மக்களுக்கு விளக்குவதில் மனத் துணிவு உடையவர்களே இவ்விருவகை சமூகத் தலைவர்கள்.

இந்த இலட்சியத்தைப் பேணி வாழும் பெரியோர்கள் எக்காலத்திலும் உண்டு. பேராசிரியர்களுக்கு உதாரணம் மறைந்த மாமேதை ரசல் பிரபு; பத்திரிகையாளருக்கு எடுத்துக்காட்டு மகாத்மா காந்தி; அவருடைய 'ஹரிஜன்' பத்திரிகை ஒரு சிறு (Tabloid) பத்திரிகை. இது எங்கள் பத்திரிகைக்கு என்றும் அழியாப் பலம் அளிக்கின்றது.

இவ்விரு பெரியோர்கள் உலகம் போற்றும் உத்தமர்கள்; ஒருவர் ஆங்கிலப் பிரபு. பிரபுத்துவத்தைப் பகிரங்கமாகத் துறந்து கணித மேதையாகத் திகழ்ந்து, இந்த நூற்றாண்டு கண்ட தத்துவ மேதையாக, பேராசிரியராக, உண்மை காண வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்தவர். மகாத்மா காந்தியின் சுய சரிதைக்கு இன்னொருபெயர் “எனது சத்திய சோதனையின் வரலாறு”. இவ்விருவர்களின் வாழ்க்கைக்கும் அப்பெயர் மிகப் பொருத்தமானது.

இத்தஉயர்ந்த நிலையையே எந்தப் பேராசிரியரும், பத்திரிகையாளரும் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்பதில் ஐயமில்லை; இவர்களின் உச்ச நிலையை அடைவது கடினமென்பது எவருக்கும் தெரியும்.

இன்று இந்த நாட்டில் மட்டுமல்ல பலநாடுகளிலும் அரசியல் வாதத்தால் அமுக்குண்ட பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் பத்திரிகா தர்மத்தைப் பாழாக்கும் எழுத்தாளர்களும் தங்கள் தங்கள் கொள்கை உறுதியைச் சோரவிட்டு பிரசாரத்துக்கு அடிமைப்படும் காட்சி பரிதாபமான காட்சி.

கடந்த ஆங்கில வாரமலர்கள் இரண்டில்; பேராசிரியர் ஒருவரும், பத்திரிகையாளர் இன்னொருவரும் வழங்கிய கருத்துக்கள் இன்றைய ஆட்சியைத் தம் தோள்களில் தாங்கும்செயல்களாகப் பரிணமிக்கின்றன: பாரபட்சமற்ற வாசகருக்கு இது இலகுவில் புரியும்.

ஏரிக்கரை ஆங்கில வாரமலரில் பேராசிரியர் கே. எம். டி. சில்வா “இனப் பிணக்கு—சில சிந்தனைகள்” என்ற தலைப்பில் நிகழ்த்திய பேருரையில் சில பகுதிகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

ஆராய்ச்சி என்ற போர்வையை அகற்ற முடியுமானால் அங்கு காணப்படும் சிந்தனைகளின் சுருக்கம் இவ்வாறு அமையும்:

“சிறுபான்மை மக்கள் வேறொரு மொழி பேசுபவர்கள்- நாட்டின் ஒருபகுதியில் ஒருங்கே வாழ்பவர்கள்- ஒரு நாட்டில் காணப்பட்டால், நாட்டின் அபிவிருத்தியில், கல்வி, தொழில், வேலை வாய்ப்புப்போன்ற விடயங்களில் இவர்கள் பெரும் எதிர்ப்பு கிளப்புவார்கள். இது சகஜம்; தமிழரின் பிரச்னை இதற்கு உதாரணம்.

இதற்குள் இந்தியத் தமிழர் பிரச்னை வேறுபட்டது; அதனை இலங்கை தீர்த்து வைத்த முறையில் மலேஷியாவால் முடியவில்லை. தமிழர் பிரச்னையில், சமஷ்டி ஆட்சியை எந்த அரசாங்கமும் ஏற்கவில்லை; இப்போது பேசப்பட்டது பிரிவினை. அது சட்ட ரீதியிலே மறுக்கப்பட்டுள்ளது. பிராந்திய சுயாட்சிதான் நல்லது போல் தெரிகிறது; 1980ல் உருவான மாவட்ட சபை ஒரு மாபெரும் அரசியல் சாதனை; இதனை உருப்படவிடாது குழப்பியடித்ததே இன்று இடம்பெற்ற பயங்கரவாதம்” இன்னும் தொடர்கிறதுஇனக்குரோத ஆராய்ச்சி!

ஈற்றில் குறிப்பிடப்பட்டிருப்பது பிரசாரம் என்ற போர்வையைத் தூக்கி எறிந்துவிட்டுப் பேசிய பாங்கில் அமைகின்றது.

“ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் 1947லும், 1977லும் அமைச்சர் அவையில் சிறுபான்மையினருக்கு தாராளமான இடமளித்திருப்பது இனப்பிணக்கை நீக்கவல்ல அரசியல் உபாயங்கள். இன்றைய அமைச்சரவையில் மூன்று முஸ்லிம்கள், இரண்டு தமிழர், ஓர் இந்தியத் தமிழர் இடம் பெறுகின்றனர்” என்று கூறிய பேராசிரியர் பெரும்பான்மை ஆட்சியென்ற அவப்பெயரை மாற்ற இதுவே வழி என்கின்றார்.

நாட்டில் நடைபெற்ற கலவரங்கள், அவைபோன்ற கொடிய இழிவான செயல்கள், பேராசிரியரின் பரிசோதனைக்கு உகந்த நிகழ்ச்சிகள் அல்லப் போலும்; மனித உரிமைகள், அவரின் ஆராய்ச்சிக்கு உதவியதாயில்லை.

SUN பத்திரிகையில் (வாரமலர்) ஒரு பக்கம்முழுவதும் அலம்பும் ‘டொன் மிதுன’ என்ற எழுத்தாளர் “கடந்த கலவரம் சிங்கள—தமிழ் இனக்கலவரம் அல்ல; வல்லரசுகளின் மாயமான தலையீடு; அது யார் என்று கண்டுபிடிப்பது கடினம்; மிகக் கவனமாக வட்ட மேசையைப் பாதுகாக்க வேண்டுமென்று எச்சரித்திருக்கிறார்; “அமெரிக்கதலையீட்டை இந்தியா எதிர்பார்க்கிறது என்று சொன்னதுமட்டுமல்ல; ரஷ்யா பின்னுக்கு நின்று இந்தியாவைத் தூண்டுகிறதாக தகவல்கள் கூறுகின்றன” என்கிறார்.

இவ்வித பிரசாரம்எவரையும் ஏமாற்றிவிடாது; எனவே எல்லாம் இழந்த நிலையில் வாழும் திக்கற்ற தமிழ் மக்கள் இன்னும் ஏமாற்றப்படுவார்களா?

---

## இலக்கிய கர்த்தாக்களுக்கு வேண்டுகோள்

# “யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்க வேண்டும்!”

[மாவிட்டபுரம்]

“யாழ்ப்பாண மக்களின் பாரம்பரியங்கள், வாழ்க்கை முறைகள் ஆகியவற்றை படம் பிடித்துக் காட்டத்தக்கவகையில் நாவல் இன்றும் எழுதப்படாதது பெரும் கவலைக்குரியதாகும். ஆகவே அத்தகைய நாவல் உருவாக்கப்பட இலக்கிய கர்த்தாக்கள் முன்வர வேண்டும்”

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணியஐயர் இணுவில் கலைஇலக்கிய இளைஞர் வட்டத்தினரின் ஆதரவுடன் நடந்த இலக்கிய கருத்தரங்கில் பேசுகையில் கூறினார்.

இவ்வட்டத்தின் முதலாவது ஆண்டு நிறைவையொட்டி நடந்த இக்கருத்தரங்கு திரு. துரைஎங்கரசு தலைமையில் இணுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்றது:

இக்கருத்தரங்கில் ‘கவிதை’ பற்றி கருத்துரை வழங்கிய யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. சபா ஜெயராசா கூறியதாவது:-

‘கவிதை உலகில் புகுத்தப்பட்ட புதுக்கவிதை முறைக்கு ஒருகாலத்தில் கடும் எதிர்ப்பு இருந்தது. ஆனால் இன்று இலங்கையில் மட்டுமல்லாது இந்தியாவில்கூட இப்புதுக் கவிதை முறைக்கு பூரண ஆதரவு கிடைத்துள்ளது. அதற்குக்காரணம் மக்களின் பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டு இக்கவிதை ஆக்கப்படுவதுதான்”

விரிவுரையாளர் திருமதி சித்திரலேகா மௌனகுரு சிறுகதைபற்றி கருத்துரை வழங்குகையில் கூறியதாவது:

“எமது சிறுகதைகள் தமிழ் நாட்டுக் கதைகளுடன் ஒப்பிடும்போது சிறந்தமுறையில் அமைகின்றது. நம்மத்தியில் புதுப்புது சிறுகதை எழுத்தாளர்கள் தோன்றுவதற்குக் காரணம் மக்கள் ஆதரவு வழங்குவதுதான்” என்றார்.

விரிவுரையாளர் திரு.மௌன ‘நாடகம்’ பற்றி கருத்து வழங்குகையில் கூறியதாவது:

ஈழத்துதமிழர்களுக்கு என்று தனித்துவமான நாடகப்பாங்கு உருவாக்கப்பட வேண்டும் அந்நாடகப்பாங்கு எம் பாரம்பரிய நாட்டுக்கூத்து அடிப்படையில் அமைக்கப்பட்டு அக்கலைக்கு ஆதரவு வழங்க வேண்டியதவசியம்” என்றார்.

மற்றும்பல இலக்கிய கர்த்தாக்கள் கருத்துரை வழங்கியதையடுத்து மாவை நித்தியானந்தனின் ‘இனிச்சரி வராது’ என்னும் நாடகம் இடம்பெற்றது

---

## சி. வை. தாமோதரம்பிள்ளை நினைவுநாள் விழா

[மாவிட்டபுரம்]

தமிழ் வளர்த்த பேரறிஞர் ராவ் பகதூர் சி வை. தாமோதரம்பிள்ளை நினைவுநாள்விழா ஜனவரி முதாம் திகதி சிறப்பாக நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். செயலகத்தில் இயங்கும் சி. வை. தாமோதரம் பிள்ளை நினைவுக் குழுவின் ஆதரவில் நடைபெறும் இவ்விழா நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் யாழ். அபிவிருத்திச் சபை முன்னாள் தலைவர் திரு. சு.நடராசா தலைமையில் நிகழவிருக்கிறது.

நல்லை குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் நினைவு நூலை வெளியிட்டு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன், நாவலர் வித்தியாலய இளைப்பாறிய அதிபர் க. ந; வேலன், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவி திருமதி கலையரசி சின்னையா ஆகியோர் உரையாற்றுவார்கள். தாமோதரம்பிள்ளை நினைவுக் கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கி, யாழ். அரசாங்க அதிபரும், நினைவுநாட்குழுச் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா, முன்னாள் வட்டுக்கோட்டை எம்.பி.கலாநிதி நீலன்திருச்செல்வம், யாழ். கல்விப் பணிப்பாளர் திரு.எம். சிமியாம்பிள்ளை ஆகியோர் உரையாற்றுவார்கள்.

---

## ‘பனையால் விழுந்தவனை மாடுதூக்கி எறிந்தால்...’

### நிதி அமைச்சரின் புது‘மொழி’

[இ. கந்தசாமி]

கலவரங்களால்பாதிக்கப்பட்டவர்களிடம் புனரமைப்புவரி அறவிடுவது பனையால் விழுந்தவனை மாடு ஏறி உழக்கியது போன்றது என்கிறார்கள், ஆனால் நானோ பனையால்விழுந்தவனை மாடு தூக்கி எறிந்து மிதித்தமாதிரியான கவலை எனக்குவருகிறது என்று நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் கூறினார்.

புனரமைப்புவரி அறவிடுவது தனக்கு கவலையாக இருந்தாலும்கூட 200 கோடி ரூபாவை சேகரிக்கமுடியும் என்பதாலேயே இதனை அறவிட முடிவு செய்ததாகவும் அவர் தெரிவித்தார். [கு]

---

## “வடமராட்சிப் பகுதிக்கு தொழில்நுட்பக் கல்லூரி நிறுவப்படவேண்டும்”

[புலோலி]

“வடமராட்சிப் பகுதிக்கெனத் தனியான பூரணத்துவம் வாய்ந்த தொழில் நுட்பக் கல்லூரி ஒன்று நிறுவப்பட வேண்டியது முக்கியமாகும் தொழில்துறைகள் விஞ்ஞான ரீதியாக நவீன மயப்படுத்தப்படுவதன்மூலம்தான் கூடுதலான பயன்களைப் பெறமுடியும். இதற்கு எமது எதிர்காலச் சந்ததியினரி தொழில் நுட்ப அறிவு மேம்படுத்தப்படவேண்டும்.

இவ்வாறு யாழ் பல்கலைக் கழகப் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் பருத்தித்துறை பொன்னுச்சாமி கோட்டத்தில் நடைபெற்ற கம்பியூட்டர் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார் திரு. இராஜரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் கணேசலிங்கம் குறிப்பிட்டதாவது:

கம்பியூட்டர்கள் சர்வதேச ரீதியாக மக்களின் வாழ்வோடு இணைந்துள்ளது. சகல பொருளாதார, தொழில்துறைகளுக்கும் முன்னேற்ற வழிகளைக் காட்டும் அளவிற்குக் கம்பியூட்டர்கள் சாதனைகளைப் புரிந்து வருகின்றன.

எமது நாடும் மேலைநாடுகளைப்போல் துரித அபிவிருத்தி மேம்பாடுகளை அடையவேண்டும். அதற்கு எமது இளைஞர்களும் கம்பியூட்டர் தொழில் நுட்பப் பயிற்சிகளைப்பெற்றிருக்கவேண்டும். எமது நாட்டிலும் பல நிறுவனங்கள் திணைக்களங்களில் கம்பியூட்டர் தொழிற்பாடு துரிதமாக அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் அபிவிருத்தி வேலைகள் துரிதமாகஉள்ளன.

எதிர்காலச் சந்ததியினரான எமது இளைஞர்கள் காலத்திற்கேற்ப தொழில்துறைப் பயிற்சிகளைப் பெறவேண்டும். கம்பியூட்டர் தொழில்நுட்பப்பயிற்சிகளைப்பெற்றுள்ள இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்புகளை இலகுவாகப்பெற வழியேற்படும்.

கம்பியூட்டர் பயிற்சிநெறி விரிவுரையாளர் திரு. கமலகுமாரும் உரையாற்றினார்.

---

## வெள்ளப் பெருக்கு:

# நெடுந்தீவிலும் பெரும் பாதிப்பு!

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் வெள்ளப் பெருக்கினாலும் கடல்கொந்தளிப்பினாலும் 180க்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேற்குப்பகுதியில் பயிர்ச்செய்கைகள் நீரினுள் மூழ்கியதுடன் தீவின் தென்பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தினால் கால்நடைகளும் குதிரைகளும் இறப்பைத் தழுவிக்கொண்டன.

பெரும்பாலானவீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளதால் அனேக குடும்பங்கள் பாதுகாப்பிடங்களை நாடிச்சென்றுள்ளன. சிறிய ஓடைகளினூடாகக் கடலை நோக்கிப் பாயும் வெள்ளத்தில் இறந்த ஆடு, மாடு, குதிரைகளின் சடலங்களும் அடித்துச் செல்லப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பிரதான வீதிக்கு மேலாக வெள்ளம் பாய்ந்ததால் சில இடங்களில் வீதி சேதத்திற்கு உள்ளானது. இதனால் போக்குவரத்துப் பெரிதும் கஷ்டமாக உள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவது தொடர்பான ஏற்பாடுகளை கிராமசேவை அலுவலர்கள் மேற்கொண்டுள்ளனர். பாதிக்கப்பட்ட சுமார் 25 குடும்பங்களுக்கு நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபைக்குரு அருட்திரு தியாகராசா சபையின் சார்பில் உணவுப்பொருட்களை இலவசமாக வழங்கினார். கடல் கொந்தளிப்பு தொடர்ந்தும் காணப்படுகிறது.

# ‘அமிர்’ கருத்து குறித்து அநுரா குற்றச்சாட்டு

(கொழும்பு)

“இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிடுவது சாத்தியமில்லை; இந்தியாவுக்கு அந்த நோக்கமும் கிடையாது என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி சென்னையில் வைத்து கூறியிருப்பதற்கு நாம் நன்றி தெரிவிக்கிறோம். அவரது பொறுப்புவாய்ந்த இந்த 45 நிமிட உரையில் தேசிய ஒற்றுமையை வலியுறுத்தி கூடுதல்நேரம் பேசியுள்ளார்”

அவசரகாலநிலை நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தை எதிர்க்கட்சிகள்சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

“இந்திய சுதந்திர வீரர்களில் ஒருவரான அமரர் ஜவஹர்லால்நேருவின் புதல்வியின் அபார ஆற்றல் குறித்து 3ம் உலக நாடுகளே பெருமை கொள்ளவேண்டும். அவரின் உதவியையும் துணிவையும் பாராட்டவேண்டும். (சென்னை இந்து பத்திரிகையில் வந்த செய்தியின் ‘போட்டோஸ்ரட்’ பிரதியை வைத்துக்கொண்டு திரு. அநுரா பேசினர்)

திரு. அமிர்தலிங்கம் மதுரையில் கூறியதாக இந்து பத்திரிகையில் வெளிவந்த மற்றொரு செய்தியை வைத்துக் கொண்டு திரு. அநுரா பண்டாரநாயக்கா பேசுகையில் கூறியதாவது:

“ஒரு நாட்டில் மனித உரிமைகள் மீறப்பட்டால் மற்ற நாடுகள் மனிதஉரிமைகள் மீறப்படும் நாடுகளின் விவகாரங்களில் தலையிடலாம் என திரு. அமிர்தலிங்கம் மதுரையில் கூறியிருக்கிறார்.

“சர்வகட்சி மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக அடுத்த மாதம் 3ம் திகதி இங்கு வர இருக்கும் திரு. அமிர்தலிங்கம், நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் தமிழ்மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டும் என மனப்பூர்வமாக விரும்புவாரேயானால் இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் பேசியிருக்கமாட்டார்.

“அவரது கூற்றுப்படி பார்த்தால் அவர்கள் ஈழம் பெற்று அங்கு மனித உரிமைகள் மீறப்பட்டால் நாமும் அவர்களின் விவகாரங்களில் தலையிடலாம், அவ்வாறுனல் உலகில் எங்குமே சுதந்திரமாக இயங்கும் நாடுகள் இருக்கமுடியாது.

“அவரது இக் கூற்றுக்கள் பொறுப்பற்றது மட்டுமல்ல துவேசத்தனமானதும்கூட. மிகுந்த அனுபவசாலியான அவர் மீது நாம் மிகுந்த மதிப்பு வைத்துள்ளோம். இதுபோன்ற கூற்றுக்களை வெளியிடவேண்டாம் என்று அவரைக் கேட்டுக்கொள்கிறன்,

தீவிரவாதிகளால் அவருக்குப் பிரச்னை உண்டு என்பது உண்மைதான். எமக்கும சுதந்திரக்கட்சிக்கும், ஏன் அரசுக்குமே தீவிரவாதிகளால் பிரச்னை உண்டு என்பதை அவர் உணரவேண்டும். இனப்பிரச்னை தீரவேண்டும் என்ற உண்மையான விருப்பம் இருந்தால் அவர் இப்படியெல்லாம் பேசமாட்டார்.

‘பார் ஈஸ்ரர்ன் எக்கனெமி’ என்ற சஞ்சிகையில் அவர் பின்வருமாறு கூறியிருக்கிறர்.

“இனப்பிரச்னைக்கான தீர்வு தமிழ்ப் புலிகளும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும் என்று கூறியிருக்கிறர். இப்படி பொறுப்பற்ற விதத்தில் பொறுப்புள்ள ஒருவர் பேசலாமா?

“லிபியா, வடகொரியா, கிழக்கு ஜெர்மனி ஆகிய நாடுகளில் 600 தமிழ் இளைஞர்கள் ஆயுதப்பயிற்சி பெறுவதாகவும் இன்னும் 5 - 6 மாதங்களில் செயல்படுவதத்கு தயாராகிவிடுவார்கள் என்றும் மற்ெருரு செய்தி கூறுகிறது. கிழக்கு ஜெர்மனி இதுபோன்ற பயிற்சிகளை அளிக்காது; இதுகுறித்து பிரதமர் பூரண விசாரணை நடத்தவேண்டும்.

“இந்தியாவிலிருந்து திரு. பார்த்தசாரதி இங்கு வந்து பேச்சுவார்த்தை நடத்திய போது அவருடன் வந்த தமக்கு பயமுறுத்தல்கள் வந்தன என்றும் இந்நிலையில் தமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்தால் மட்டுமே தாம் இலங்கை திரும்புவது சாத்தியமாகும் என்றும் திரு அமிர்தலிங்கம் கூறியதாக ‘இந்து’ பத்திரிகையில் மற்ெருரு செய்தி கூறுகிறது.

“தமிழர் கூட்டணியினருக்கு வடக்கு-கிழக்கில்எதுவித ஆபத்தும் இல்லை. ஆனல் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு இராசதுரைக்குத்தான் அப்பகுதிகளுக்குப் போகமுடியாத நிலை. கொழும்பில்கூட அவர்களுக்கு எதுவித ஆபத்தும் இல்லை.

“தமிழர் கூட்டணியின் முன்னாள் எம்பியான கலாநிதி நீலன்திருச்செல்வம் ஜூலை கலவரத்தின் பின்னரும் தொடர்ந்து கொழும்பில்தான் இருக்கிறர். தொடர்ந்துதமது வேலைகளையும்செய்துவருகிறர்.

“கூட்டணியினருக்கு புலிகளால் ஆபத்து. கோப்பாய் எம். பி. சுடப்பட்டார். திரு. அமிர்தலிங்கத்தின் கார் சேதப்படுத்தப்பட்டது. மானிப்பாய் எம். பி. யின் கார் தீக்கிரையாக்கப்பட்டது. இந்த வேலைகளை எல்லாம் சிங்களவர்கள் செய்யவில்லை. எனவே திரு. அமிர்தலிங்கம் கொழும்புக்கு வரலாம், வந்து பிரச்னைகள் தீர உதவவேண்டும்.

“மீண்டும் ஒருவிடயத்தை எனது நம்பிக்கையை வலியுறுத்திக் கூறுகிறேன். திருமதி இந்திரகாந்தி இருக்கும்வரை இந்தியாவினல் இலங்கைக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது. முன்னரும் கூறினேம் இப்போதும் அதையே கூறுகிறேம்” என்றர்.

## நாளாந்தம் வடபகுதியில் 2,000 போத்தல் கள்ளை பெறுமதியாக்க ஏற்பாடு

(மானிப்பாய்)

மானிப்பாய்வலி-தென்.மே. தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க வளர்ச்சிக்கு பெருமளவு சேவையாற்றியமைக்கு கூ. அ. உ. ஆணையாளர் திரு ச. வேலாயுதபிள்ளைக்கு சங்க வருடாந்த பொதுக் கூடடத்தில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

சங்க பொதுச்சபைக் கூட்டத்தில் பேசிய தலைவர் திரு. யோ. செபஸ்தியாம்பிள்ளை இப்பாராட்டினைத் தெரிவித்தார். அவர் தமது உரையில் பல வருடங்களாக நட்டமடைந்திருந்த எமது சங்கம் இப்போது ஏனைய சங்கங்களின் வளர்ச்சியினைவிட துரிதமாக முன்னேறியுள்ளது.

இவ்வளர்ச்சி எமது கூ. அ. உ. ஆணையாளரின் அளப்பரிய சேவையாலேயே ஏற்பட்டதாகும். அவர் ஆற்றிய சேவைகளை தனித்தனியாக எடுத்துக் கூறும்போது அங்கத்தவர் கட்டாய சேமிப்பில் ஒன்றரை லட்சம் வரை சேமிக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியமையும், போத்தல் கள்ளடைப்பு நிலையம் அமைப்பதற்கு ப. பொ. அ. சபை மூலம் பல லட்ச ரூபா செலவில் உதவி பெற்றுத் தந்தமையும் குறிப்பிடத்தக்கதே. இதனைப் பெற்றுத் தந்தமையால் எமது சங்கம் வருடாவருடம் பல இலட்சம் போத்தல் கணக்கில் அகற்றிவந்த கள்ளை போத்தல்களாக அடைக்கும் வாய்ப்பு உண்டானது. இதனல் அங்கத்தவர் மத்தியில் நிலவிவந்த நஷ்டத்துக்குரிய தப்பான எண்ணத்தை தவிர்த்து பெருந்தொகையான கள்ளை அவர்கள்மூலம் இறக்குவித்து போத்தலில் அடைத்துக் கொள்ளும் சமயத்தில் எமது நிலையத்தில் தினசரி 2000 போத்தல் கள்ளை பெறுமதியாக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

எமது சங்கத்துக்கு சொந்தக் காணி கட்டிடம் ஒன்றை அரச அதிபருக்குத் தெரிவித்து அவர் உதவியுடன் எமக்கு கிடைக்கக் கூடிய பெரும் உதவியைச் செய்து தந்தவரும் கூ. அ. உ. ஆணையாளரேயாகும். இவரால் எமது சங்கத்துக்கும் ஏனைய சங்கங்களுக்கும் கிடைக்கப்பெறும் சேவைகளை தெரியப்படுத்தி இவரது சேவை எமது சமூகத்துக்கு இன்றியமையாதது எனவும், இவர் சேவைஆற்றும் பொழுது எங்களில் ஒருவனகவே மாறி எமது சமூக மக்களுடன் சேர்ந்து தொண்டாற்றியதை எவரும் மறுக்கமாட்டார்கள் எனவும் இதனல் எமது சமூக சாரிபில் அளப்பரிய சேவையாற்றிய சமூகத் தொண்டன் என பாராட்டுவதுடன் எமது சமூகமும் என்றும் இவரது தொண்டுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டவர்கள் எனவும் தெரிவித்துக் கொண்டார். கூ

## பண்டத்தரிப்பு

### மகளிர் கல்லூரி அபிவிருத்திச்சங்கம் நன்றி

(பண்டத்தரிப்பு)

கடந்த ஜூலை மாத கலவரங்களில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வந்த மாணவிகளின் நலன் கருதி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு 50 மேசை, கதிரைகளையும், மலசலகூடங்களையும் நிறுவி உதவி புரிந்த ரெட்பாணு நிறுவனத்திற்கும், நோர்வே நாட்டு ‘நோர்வேயின்’ நிறுவனத்திற்கும் நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகள் வருமாறு:-

தலைவர்: திருமதி க. ஆறுமுகதாசன், உப தலைவர்; திரு. எஸ் சரவணமுத்து, செயலாளர்: திரு. செ. இரத்தினவேல். உபசெயலாளர்; செல்வி எஸ். கந்தையா, பொருளாளர்: திரு. சே. நடராசா.

செயற்குழு உறுப்பினராக 10 பேர் தெரிவாகினர்.

## ரூ. 10 லட்சம் வீடமைப்புத்திட்டம்: கிராமத்துக்கு ரூ. 46 ஆயிரம் பரீட்சார்த்த கடன்!

(மாவிட்டபுரம்)

பத்து லட்சம் வீடமைக்கும் திட்டத்தின்கீழ் அடுத்தவருடம் ஒரு கிராமத்துக்கு 46ஆயிரம் ரூபா வீதம் பரீட்சார்த்தமான முறையில் கடன் வழங்கும் திட்டம் அமுல்செய்யப்படவிருக்கிறது.

இத்தகவலை யாழ். தேசிய வீடமைப்பு அதிகாரசபையைச் சேர்ந்த திரு சச்சிதானந்தம் வலி-தெற்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடந்த கருத்தரங்கில் வெளியிட்டார்.

பத்து லட்சம் வீடமைக்கும் திட்டத்தின்படி வழங்கவிருக்கும் கடன் சம்பந்தமாக விளங்கும் வகையில் வலி. தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம் தலைமையில் நடந்த மேற்படி கருத்தரங்கில் அவர் மேலும் கூறியதாவது:

“அடுத்த வருடம் ஒரு கிராமத்துக்கு 46 ஆயிரம் ரூபா வீதம் கடன்வழங்கும் திட்டமொன்றைப் பரீட்சார்த்தமாக நடைமுறைக்குக் கொண்டுவரவிருக்கிறேம், இதன்படி கீழ்தர வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு வீடு, மலசல கூடம் தரமுயர்த்த 5000 ரூபாவழங்கவிருக்கிறேம். நடுத்தர வகுப்பினருக்கு வீடு, மலசல கூடம் தரமுயர்த்த 2,000 ரூபா வழங்கவிருக்கிறேம். அடிப்படை வீடமைப்புக்குக் கீழ்தர வகுப்பினருக்கு 5000 ரூபா வழங்கவிருக்கிறேம் அத்துடன் மலசலகூடம் கிணறு திருத்த 3000/- ரூபாவும் குழாய் கிணறு தோண்ட 7000/- ரூபாவும் வழங்கவிருக்கிறேம்.

இத்துடன் இது போன்ற பல்வேறுபட்டகடன் வழங்க ஏற்பாடுகள் செய்துள்ளோம். இக்கடன்கள் ஒவ்வொரு கிராமத்தில் தன்னிச்சையாகஇயங்கும் சமூக இயக்கங்களின் ஆலோசனைப்படி உதவி அரசாங்க அதிபரின் சிபாரிசுப்படி வழங்கவிருக்கிறேம். இப்பரீட்சார்த்த திட்டம் வெற்றிபெறுமானல் கூடியபணம் ஒதுக்கீடு செய்வோம்” என்றர்.

வலி-தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம்மும் பேசினர்.

இக்கருத்தரங்கில் கலந்துகொண்ட சமூகஸ்தாபனங்களின் தலைவர்கள், இங்கு வழங்க உத்தேசித்துள்ள கடன் இங்குள்ள முறைப்படி வீடு, மலசலகூடம் கட்டப் போதாது. தென்னிலங்கையிலுள்ளவர்கள் கட்டப் போதுமான அளவு பணமே இங்கும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகவே இங்குள்ள நிலைமைக்குத் தக்கதாக கடன் பணத்தைக் கூட்டி வழங்கவேண்டுமென்று கோரினர்கள்.

இக்கருத்தரங்கில் இணுவில் சமாதான சபைத் தலைவர் தி. சி. சண்முகலிங்கம், ஏழாலை கிராமோதய சபைத் தலைவர் க. மகாதேவன், சுன்னுகம் கிராமோதய சபைத் தலைவர்சி. குமாரவேலு, இணுவில் பிரதேச சபைத் தலைவர் செ. இலகுநாதன், உடுவில் சர்வோதயத் தலைவர் செ. தில்லைநாதன் உட்படப் பலர் கலந்துரையாற்றினர்.

## வட்டு. லயன்ஸ் ஏற்பாடு: வசதியற்றேருக்கு மூக்குக் கண்ணுடி

(பண்டத்தரிப்பு)

கண்பார்வை குறைந்தவர்களுக்கு இலவசமாக வழங்குவதற்காக டென்மார்க் நாட்டிலுள்ள லயன்ஸ் கழகம் கொழும்பு மத்திய லயன்ஸ் கழகத்திற்கூடாக வட்டுக்கோட்டைலயன்ஸ் கழகத்திற்கு 75 மூக்குக்கண்ணுடிகளை அண்மையில் அனுப்பி வைத்துள்ளது.

இந்த மூக்குக் கண்ணுடிகளைத் தமது பகுதியிலுள்ள மிகவும் வசதியற்ற நிலையிலுள்ளவர்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கு இலவசமாக வழங்குவதற்கான ஒழுங்குகளை வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் மேற்கொண்டு வருகின்றது.

## ஆசிரியர் விடுதிக்கு அடிக்கல்

[பரந்தன்]

கிளிநொச்சி சென்திரேசா மகளிர் மகாவித்தியாலய ஆசிரியர் விடுதிக்கான அடிக்கல்லை இக்கல்லூரி அதிபர் செல்வி ராதா சோமசுந்தரம் நாட்டிவைத்தார்.

இவ் அடிக்கல்நாட்டு வைபவத்தின்போது விநாயகர் பூசையுடன் மதஸ்லோகங்களும் ஓதப்பட்டன அதிபர் செல்வி ராதா சோமசுந்தரம் அடிக்கல்லை சக ஆசிரியர்கள் சகிதம் நாட்டிவைத்தார் அத்துடன் மேற்படி மகாவித்தியாலய மாணவிகள் இருவரையும் அடிக்கற்களை நாட்டச் செய்தார்.

## வீதி சீர்கேடு

(மானிப்பாய்)

யாழ். மானிப்பாய்வீதி அண்மையில் பெய்த பெருமழை காரணமாக மேலும் பெருமழை காரணமாக மேலும் படுமோசமடைந்துள்ளது.

ஐந்து முச்சந்தியிலிருந்து ஆனைக்கோட்டை ஆறுகால் மடம்வரை போக்குவரத்துக்குதவாத நிலையில் குண்டும் குழியுமாக இருப்பதால் சைக்கிளில் செல்பவர்கள் பெரும் கஷ்டங்களை நாளாந்தம் அனுபவிக்கின்றர்கள். இந்த வீதியில் சில இடங்களில் ‘தார்’ அற்ற நிலையில் வெறும் கற்களே காணப்படுகின்றன.

## அநாதரவாகக்கிடந்த மோட்டார்சைக்கிள்

(மாவிட்டபுரம்)

வீடொன்றிலிருந்து இரவு நேரம் கடத்திச்செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் அவ் வீட்டிலிருந்து சற்றுத்தொலைவில் அநாதரவாக விடப்பட்டுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வீமன்காமத்தைச் சேர்ந்த கதிரவேலு ஸ்ரீரங்கன் என்பவரது 86 ஸ்ரீ 9658 இலக்க மோட்டார் சைக்கிள் அவரது வீட்டுக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த சமயம் இரவு நேரம் வீட்டின் கேற்றை உடைத்து உட்சென்ற இனம் தெரியாதவர்கள் 18 ஆயிரம் ரூபா பெறுமதியான அம் மோட்டார் சைக்கிளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதுபற்றி காங்கேசன் துறைப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

காங்கேசன்துறைப் பொலிசைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. ரி. சிவபாலசுந்தரம் தமது கடமை முடிந்து வீமன்காமத்திலுள்ள தமது வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த சமயம் இந்த மோட்டார் சைக்கிள் வீதியால் வந்து கொண்டிருப்பதாகத் தெரியவரவே உடன் காங்கேசன்

(8ம் பக்கம் பார்க்க)

யாழ். நவீனசந்தை

# விருந்தையில் புதிதாக தற்காலிக கடைகள்!

## ஆணையாளருக்கு புகார்

[யாழ்ப்பாணம்]

யாழ். நவீன சந்தை விருந்தையில், புதிதாகத் தற்காலிக கடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், போக்குவரத்துக் கஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் புகார் செய்துள்ளதைத் தொடர்ந்து யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

விருந்தைகளில், சில கடை உரிமையாளர்கள் மேலதிக சாமான்களை வைத்து விற்பனை செய்துவருகின்றதாகவும் மற்றும் குடை திருத்துவோர், முந்திரிகை வியாபாரிகள், முட்டை வியாபாரிகள் தற்காலிககடைகள் நடாத்துவதாகவும் புகார் செய்யப்பட்டிருந்தது.

கடை உரிமையாளரிடம் தெரிவித்துவிருந்தையில்உள்ள விற்பனையாளரை அப்புறப்படுத்துமாறு மாநகரசபை ஊழியருக்கு ஆணையாளர் பணித்துள்ளார்.

நவீன சந்தை பஸ் நிலையப் பக்க நடைபாதையில் நூற்றுக்கணக்கான சைக்கிள்களும், வாகனங்களும் நிறுத்தப்படுள்ளதால் மழை காலங்களில் மக்கள் கடைகளுக்குச் செல்ல முடியாமல் இருப்பதாகவும், ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதுபற்றியும் நடவடிக்கை எடுக்கவிருப்பதாக ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# கடத்தலைத் தடுக்க புதியவழிவகைகள்

[கொழும்பு]

போதைவஸ்துகள் மற்றும் சட்ட விரோதமான பொருட்கள் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே கடத்தப்படுவதைத் தடுக்கப் புதிய வழிவகைகள் எடுக்கப்படவுள்ளன.

இதுதொடர்பான இலங்கை இந்திய அதிகாரிகளுக்கிடை, லான பேச்சுக்கள் கடந்த மூன்று தினங்களாகக் கொழும்பில் நடைபெற்றது.

இந்த ஆண்டு இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கடத்தப்பட்ட 45 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகச் சுங்க அதிகாரியொருவர் தெரிவித்தார். இவற்றில் மின்சார உபகரணங்களும், சிந்தெட்டிக் புடவைகளும் அடங்கியிருந்தன.

இலங்கையிலிருந்து இந்தியாவிற்குப் பெருமளவில் பீடிஇலைகளும், புகையிலையும் இந்த ஆண்டு கடத்திச் செல்லப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

தங்கக் கடத்தல் இந்த ஆண்டு குறைவாக நடைபெற்றதாக இந்திய சுங்க அதிகாரியொருவர் தெரிவித்தார். கடத்தலில் ஈடுபட்ட பலயிடகுகளும் பறிமுதல் செய்யப்பட்டதாக அவர் கூறினார்.

[வெ]

# அத்துமீறிக் குடியேறியோர் மதிப்பீடு

[கொழும்பு]

''திருகோணமலை, முல்லைத்தீவு, வவனியா மாவட்டங்களில் அத்துமீறிக் குடியேறியவர்கள்பற்றி எமது அமைச்சு மதிப்பீடொன்றை நடத்தியுள்ளது.''

இவ்வாறு காணி, காணி அபிவிருத்தி பிரதி அமைச்சர் திரு. ஏ.ஆர்.எம் அதிகாரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இம்மாவட்டங்களில் அத்துமீறிக் குடியேறியவர்கள்பற்றி மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டறிக்கை இப்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

(இ-வெ)

குடத்தனை மரணம்:

# 10 சந்தேக நபர்களை கைதுசெய்யுமாறு உத்தரவு

(புலோலி)

குடத்தனையைச் சேர்ந்த, கே சிவராசா மரணம் தொடர்பாக பத்து சந்தேகநபர்களைக் கைதுசெய்யுமாறு மரண விசாரணை நடத்திய பருத்தித்துறை நீதவான் திரு. கே. கணபதிப்பிள்ளை உத்தரவிட்டுள்ளார்.

பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே கே. மகேந்திரன், சப்இன்ஸ்பெக்டர் எல். பெரேரா, கான்ஸ்டபிள்கள் கே. சுப்பிரமணியம், எஸ். சிவராசா, பியசேன, கே.விக்னேஸ்வரன், சிவகுமார் ஆகியோரைக் கொண்ட கோஷ்டி இச்சம்பவம்பற்றிப் புலன் விசாரணை செய்துவருகிறது.

இச்சம்பவத்தின்போது காயமடைந்து அனுமதிக்கப்பட்டுள்ள இறந்தவரின் தந்தை வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை மரண விசாரணையில் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:- ''என் மகன் வேலைக்குச் செல்லப்புறப்பட்டபோது கேற்றடியில் நின்று ஒருவர் மகனைக்கூப்பிட்டார். மகன் வெளியில் சென்றபோது இவர் நின்றார்கள். அவர்களை எனக்குத் தெரியும் கடலில் இறால் பிடித்தது தொடர்பாகப் பிரச்னை இருந்தது வெளியில் நின்றவர்கள் அவரை அடித்தார்கள் மகன்மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

பருத்தித்துறை நீதவான், மரணவிசாரணையை ஒத்தி வைத்தார். (க)

# 'இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கு விசாரணையின்றி சம்பளம் வழங்கவேண்டும்!' - இலங்கை ஆசிரியர் காங்கிரஸ்

[யாழ்ப்பாணம்]

இடம்பெயர்ந்து சென்றுபின் மீண்டும் வேலைக்குத் திரும்பிய ஆசிரியர்களுக்கு எதுவித விசாரணைகளுமின்றி சம்பளம் வழங்கும்படி கல்வி அமைச்சு பிராந்தியக் கல்விப்பணிப்பாளர்களுக்குப்பணித்திருந்தும், பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்காது திருப்பி அனுப்பிவிட்டார்களாம்.

இது சம்பந்தமாக இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் தலைவர் திரு. செல்லச்சாமி, அதன் செயலாளர் திரு க.சிவஞானம் ஆகியோர் கல்வி அமைச்சின் சிரேஷ்ட காரியதரிசி திருமதி பத்மாரணசிங்காவுடன்தொடர்புகொண்டு பேச்சுவார்த்தை நடத்தியபின்னர் கீழ்க்காணும் சுற்றுநிருபம் ஒன்றை அவர் சகல பிராந்தியக் கல்விக் கந்தோர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

வேலைக்குத்திரும்பிய ஆசிரியர்களுக்கு அக்டோபர் மாதம் தொடக்கம் எதுவித விசாரணையுமின்றி வேலை பாரமேற்ற கடிதத்துடன் சம்பளம் வழங்குதல்.

தோட்டப் பாடசாலைகளில் சேவை செய்த காலங்களில் 20 வருடம் சேவைசெய்த பெண் ஆசிரியர்களுக்கும், 20 வருடம் சேவையுடன் 55 வயதுடைய ஆண் ஆசிரியர்களுக்கும் ஒய்வூதியம் பெற விண்ணப்பிக்க அனுமதி வழங்கி விண்ணப்பங்களைப் பிராந்தியக்

(8ம் பக்கம் பார்க்க)


'எனக்கு பிரபலமான பெயரைக் கொண்ட கஸெட்டுகள் சில கிடைத்தன அவை உண்மையிலேயே மலிவானவை என்னுடைய அதிர்ஷ்டத்தை என்னால் நம்பமுடியவில்லை

ஆனல் அவை போலியானவை, அவை இப்போது என் ஒலிப்பதிவுக் கருவியின் ஒலிப்பதிவுமுனையை பாழடித்துவிட்டன.'

'அந்தக் கஸெட்டுகள் தரமானவை போன்றே தோன்றின் மிக மலிவாகவும் கிடைத்தன.

ஆனல் அவை இப்போது சிக்கி, அறுந்து,இழுபட்டு அப்பப்பா ஒரே தொல்லை.'

'நான் ஏமாற மறுப்பவன் எனவே நான் எப்போதும் TDK கஸெட்டுக்களை மட்டுமே வாங்குவேன் அதுவும் மகாராஜா நிறுவனத்திடமே அவற்றை வாங்குவேன் ஏனெனில் அப்போதுதான் அவை உண்மையானவை என் நான் 100% நம்புவேன்

ஏன் எல்லோருமே அவ்வாறு செய்வதில்லை என்பது எனக்குப் புரிய வில்லை.'







TDK கஸெட்டுகள் மகாராஜா நிறுவனம் வழங்குவது. ஏமாறமறுக்கும் மக்களுக் கேற்றது.



இன்றைய சந்தையில் இருக்கும் கஸெட்டுக்களில் கிட்டத்தட்ட அரைப்பங்கு போலியானவை. விற்பன்னர் ஒருவர் கூட அவற்றைப்பார்த்து வித்தியாசத்தைக் கூறமுடியாது. அதுமட்டுமல்ல ஒரு நம்பகமான வியாபாரிகூட போலி கஸெட்டுக்களை உங்களுக்கு விற்கலாம் ஏனெனில் அவர்கூட அவை போலியானவை யென்பதை அறிந்திருக்கமாட்டார் எனவே மிகக்கவனமாயிருங்கள். உண்மையான உயர்தரமான ஜப்பானிய கஸெட்டுகள் உங்களுக்கு வேண்டுமானல் நாங்கள் உங்களுக்குத்தரும் அறிவுறை யென்னவெனில், TDK வாங்குங்கள் என்பதே! அதையும் நேரடியாக ஏக விற்பனையாளர்களான மகாராஜா நிறுவனத்திடம் வாங்குங்கள், அல்லது நாடு பூராவும், அவர்களால் நியமிக்கப்பட்ட விற்பனையாளர்களிடம் பெற்றுக் கொள்ளுங்கள்.

TDK®

மகாராஜா ஓர்கனைஷேசன் லிமிட்டெட்

இலங்கையில் TDK கஸெட்டுக்களுக்கு ஏக விற்பனையாளர்கள்

கொழும்பு டொரரனு மியுசிக் சென்டர் • சலாகா • சன்ஸ் ரெகோட்பார் • சரவண இலக்ட்ரிகல்ஸ்
களுத்துறை பென்ஸி ஹவுஸ் • சிப்சைட் மொரட்டுவ நிஷாந ரெகோர்ட்பார் பாணந்துறை பென்ஸி மஹால்
அளுத்கம பெஷன் செண்டர் எல்பிட்டிய எல்பிட்டிய மெடிக்கல்ஸ் பேருவளை பஸ்மினஸ்
காலி ஸ்டார்லைன் ரெகோர்ட்பார் • விஜேதுங்க அன் கம்பெனி மாத்தறை F. S. செர்ப்பிங் சென்டர்
இரத்தினபுரி சிறிலக் பென்சி ஹவுஸ் • ரூபன் ரேடியோ யாழ்ப்பாணம் மகாராஜா இன்வெஸ்ற்மன்ஸ் லிமிடெட்

HTL MO 1379

மனோகரா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
கணவன்
(புதிய பிரதி)

ராணி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-15
ஜெமினி-சரோஜாதேவி
ஸ்ரீதரின்
கல்யாண பரிசு

வெலிங்டன் (மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
குழந்தையும்
தெய்வமும்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
அன்னை வேளாங்கன்னி
தமிழகத்தில் முன்னணி நட்சத்திரங்கள் இணைந்து நடித்த வெற்றிச்சித்திரம்

லிடோ (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
Escape to Athena

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-ஸ்ரீபிரியா- அம்பிகா
சங்கிலி (புதிய பிரதி)

ராஜா (யாழ்நகர்)
10-30, 2-30, 6-00
கமலஹாசன் - ரதி
உல்லாசப்பறவைகள்

பல இடைவெளிக்குப் பின் மிக விரைவில் புதுவருடத்தைக் கொண்டாடத் திரையிடவிருக்கும்
சிவாஜி-சௌகார் ஜானகி
பாபு (புதிய பிரதி)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
அரங்கு நிறைந்த மகத்தான 3-வது
மகளிர் வாரம்
சிவகுமார் - ராதா
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
ஆனந்தராகம்
(கலர்)
இசை: இளையராஜா

நேற்று-
"DOGS OF WAR"
இன்று-
"BIG RED ONE"
மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஆங்கில திரைப்பட ரசிகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.
Regal (Jaffna)
Daily 10-30 a.m. 2-30, 4-45, 7-00 p.m. only
LEE MARVIN...in
THE BIG RED ONE
Action- Packed- Adventure
(A war movie for all age)
தவிர்க்க முடியாத காரணங்களினால் 30-12-83 மட்டுமே காண்பிக்கப்படும். மேலும் நீடிக்கப்பட முடியாமைக்காக வருந்தப்படுகிறோம்.
?
பயணங்கள் முடிவதில்லை


# இன்றைய பலன்

மார்கழி மாதம் 12ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(27-12-83)

மேடம்: சட்டம் இன்று உங்கள் விடயத்தில் தாங்கி விடும் ஆயுத பீடைக்கு இடமுண்டு அவசர போக்கை தவிர்க்கவும்.

இடபம்: கன்னியமானகாரியங்களை முடிப்பதில் வெற்றி காண்பீர்கள் காதல்கிட்டுகளுக்கு இன்று தேன்சொட்டும் தினம் சுற்றுடலில் மதிப்பும் செல்வாக்கும் உயரும்.

மிதுனம்: எதிலும் முன்னணியில் நிற்பீர்கள் பிறரின் கவனம் உங்கள்மீது செலுத்தப்படும் சொந்தமாக தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும் பதவி உயர்வுமுண்டு.

கடகம்: திடீர் பொருள்வரவு வாழ்க்கையில் திருப்பத்தை உண்டுபண்ணும் துணிவே துணைகொண்டு கருமங்களைச் சாதிப்பீர்கள் பொதுசனத் தலைமையுடன் புகழும் சேரும்.

சிங்கம்: பொருள் குறைவதற்கு இடமுண்டு தொழில் துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படலாம் முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும் போட்டி மனப்பான்மையை தவிர்க்கவும்.

கன்னி: இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தை சுருக்கும் இதயபாரம் வேதனையைத்தரும் திடசித்தம் இருப்பின் வெற்றிகிட்டும்.

துலாம்; பயன்தரும் பயணம் இன்று மேற்கொள்ளப்படலாம் பழைய நினைவுகள் தலைதூக்கும் குடும்பம் குதூகலமாகும் சுபதினம்.

விருச்சிகம்: சகோதரங்கள் மூலம் பிரச்னை உருவாகலாம் அன்னியர்வாசம் ஆபத்தைத் தரும் அரசபயத்திற்கும் இடமுண்டு.

தனுசு: முன்னேற்றமான சம்பவங்கள் இடம்பெறும் வாகனவிருத்திக்கு இடமுண்டு கல்வி நிலையிலும் ஆர்வம் பிறக்கும்.

மகரம்: பிள்ளைப்பாசம் உள்ளத்தில் தலைதூக்கும் சமயோசித குணத்தால் எதையும் வெற்றிகாண்பீர் குடும்பப் பிணைப்புகள் இறுகும்.

கும்பம்: தூரதேச வாசம் துயரத்தில் ஆழ்த்தும் எதிர்பாராத விபத்துக்களுக்கும் இடமுண்டு ஆயுதப் பழக்கம் ஆபத்தை உருவாக்கலாம் அவதானமாக இருக்கவும்.

மீனம்: காதலர்களுக்கு கனிவானதினம் குடும்பத்தில் குதூகலம் தென்படும் உறவினர் பெற்றோர் பெரியோர் ஆசியும் தப்பாமல் கிட்டும் சுபதினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# யார் இந்த இளைஞர்?

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத இளைஞரின் சடலம் காயங்களுடன் அழுகிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு அடையாளம் காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

அராலி தெற்கு கருப்பிட்டி பிள்ளையார் கோவில் கேணிக்குள் இச்சடலம் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

சுமார் 20 வயதுள்ள இளைஞரின் சடலத்தில் கறுப்புநிற அரைக்கால் சட்டையும் வெள்ளைநிற அரைக்கை சேட்டும் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப் பகுதி பொதுமக்கள் நேற்றுமுன்தினம் காங்கேசன்துறைப் பொலிஸ்நிலையத்தில் இச்சடலம் சம்பந்தமாகப் புகார்செய்ததைத் தொடர்ந்து கான்ஸ்டபிள் கே. வல்லிபுரம் சடலத்தைப் பொறுப்பேற்று அடையாளம் காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைத்துள்ளார். யாழ். பொலிஸ் புகைப்படப் பிடிப்பாளர் இச் சடலத்தை படம்பிடித்துள்ளனர். (மா)


சாந்தி (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
மாதர்களுக்கான
7-வது கடைசி வாரம்
ஊரும் உறவும்
வண்ண ஓவியம்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-00.
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
மூன்றும் பிறை
(வெள்ளிவிழா சித்திரம்)


# ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-02 | 'லஸி' — நாயொன்றின் தீரச்செயல்கள் (ஆங்கிலம்) |
| 6-30 | 'விசுவாசஒளி'— கிறிஸ்தவ நிகழ்ச்சி (தமிழ்) |
| 7-00 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | விளையாட்டுப் பயிற்சி |
| 7-45 | புரொஜெக்ட்- யு. எவ். ஓ. (ஆங்கில நிகழ்ச்சி) |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-30 | புரொஜெக்ட் தொடர்ச்சி. |
| 9-00 | வெளிநாட்டு செய்தி விமர்சனம் |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | 'ஹவாய்-5 ஓ' துப்பறியும் தொடர் சித்திரம் (ஆங்கிலம்) |
| 10-40 | நிகழ்ச்சிகள் முடிவு. |

# ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு

(மானிப்பாய்)

கோப்பாய்தெற்கு கட்டைப்பிராயைச் சேர்ந்த ஆசிரியை திருமதி என். தெய்வேந்திரன் சுமார் 37 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் இலங்கையின் பல பாகங்களிலும் ஆசிரியையாகக் கடமையாற்றிய பின்னர் கோப்பாய்தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் 25 வருட காலமாக தொடர்ச்சியாக கடமையாற்றியபோது அப் பாடசாலையின் முன்னேற்றத்திற்கும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் தன்னாலான பங்களிப்பைச் செய்து ஏனைய மக்களின் நன்மதிப்பையும் பெற்றுள்ளார்

இப்பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் முக்கிய பதவிகளை ஏற்றுப் பணியாற்றியதுடன், கட்டைப்பிராய் கலைமணி மாதர் சங்கத்தின் தலைவியாகவும் இவர் பணியாற்றி வருகிறார்.

## வடமராட்சி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

புலோலி தெற்கில் உள்ள வீடொன்றின்மீது பலத்த காற்று வீசியபோது பனைமரமொன்று வீழ்ந்தது. இதனால் அவ்வீட்டினுள் இருந்த சக்திவேலாயுதம் என்ற நபர் (வயது36) மயிரிழையில் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினார் தற்போது அவர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார் (கி)

## விசாரணை...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

கல்விக் கந்தோர் ஏற்றுக்கொள்ளுதல்.

இதுவரை மூன்றுமாத சம்பள முற்பணத்திற்கு விண்ணப்பித்த பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கும் விண்ணப்பிக்காத, பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கும் விண்ணப்பப் பத்திரத்தை ஏற்று உடனடியாக முற்பணம் வழங்குதல். [மா)

# வரப்பெற்றோம்

## லீலாதினக் கலண்டர்

வழமைபோல் 1984-ம் ஆண்டுக்கான 'லீலா' பஞ்சாங்க சித்திரக் கலண்டர் அழகான வண்ணப்பட அட்டைகளுடன் வெளிவந்துள்ளது.

திகதிகள் கொட்டை எழுத்துக்களில் அச்சிடப்பட்டுள்ளதுடன் அன்றன்றைக்குத் தேவையான குறிப்புகள், நட்சத்திரம், இராகு காலம், சுபநேரங்கள் முதலியன இடம்பெற்றுள்ளன. ஆங்கில நாள் காட்டியுடன் தமிழ். இஸ்லாமிய திகதிகளும் இடம் பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும்.

## மாதக்கலண்டர்

லீலாபஞ்சாங்க மாதக்கலண்டர் அழகான தாளில் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளது ஆங்கிலம், தமிழ். அரபுத் திகதிகளும் இராகுகாலம், சுபநேரம், திதி நட்சத்திர யோகம் மற்றும் விசேஷ தினங்கள், குருபூசை தினங்கள், பெரியார் தினங்களும் இடம் பெற்றுள்ளன. ஒரேபார்வையில் ஒரு மாதவிஷயங்களைத் தெரிந்து கொள்வதற்கு இக் கலண்டர் வெகு உதவியாக அமைந்துள்ளது.

## லீலா மேசைடயறி

1984ம் ஆண்டுக்கான லீலா மேசை டயறி வரப்பெற்றோம். வழமை போலவே அழகாகவும் பொலிவாகவும் முக்கிய - தேவையான - தகவல்களை உள்ளடக்கிய இந்த மேசை டயறியில் இந்துப் பெருநாட்கள், விரதங்கள், இஸ்லாமிய விசேஷ நாட்கள், கிறிஸ்தவ திருநாட்கள் முதலியன தெளிவாகத் தரப்பட்டுள்ளன.

## லீலா பொக்கற் டயறி

வழமைபோலவே அழகாகவும் கைக்கு அடக்கமாகவும் அதிக தகவல்களுடன் வெளிவந்துள்ள லீலா பொக்கற் டயறி கொடுக்கும் பணத்திற்குத் திருப்தி தருவதாகும்.

ஃ ஃ

## சுவர்

சுவர் என்ற இருமாத வெளியீடு வரப் பெற்றோம். முற்றும் புதிய அமைப்பிலான இச் சஞ்சிகையின் அட்டை பார்த்த மாத்திரத்தே அதனைப் படிக்கத் தூண்டுவதாயுள்ளது. நவம்பர் - டிசம்பர் மாத முதலாவது இதழ் இப்போது வெளிவந்துள்ளது. இதன் விலை ரூபா 3-50.

--சபா

0 0 0

## கூத்தும் மரபும்

திரு த. சண்முகசுந்தரத்தின் 'வன்னிவளநாட்டின் புதுக்குடியிருப்புக் கூத்தும்,' நூல் வரப்பெற்றோம்

வெளியீடு: அருள் வெளியீட்டகம், மாவை கந்தசாமி, கோயிலடி, தெல்லிப்பழை, இலங்கை.

விலை: ரூபா 5-00. (ப)

# யாருடையது?

யாழ். சிறும்பியடி லேனைச் சேர்ந்த திரு. எஸ் நகுலபாஸ்கரன் என்பவர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் பஸ்ஸில் வருகையில் கண்டெடுத்த குடையொன்றினை 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. பி. வி குணசேகரம் என்பவர் நல்லூர் பின்வீதியில் திரு. பரஞ்சோதி செலவரத்தினம் என்பவருடைய அடையாள அட்டையைக் கண்டு எடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

# பிரான்ஸிற்கான புதிய இலங்கைத் தூதுவர்

[கொழும்பு]

பிரான்ஸின் புதிய இலங்கைத் தூதுவராக திரு. டி.ஜி. பந்துசேன டி சில்வாவை நியமிக்க இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

பிரான்ஸின் தற்போதைய இலங்கைத் தூதுவராக திரு. என். பாலசுப்பிரமணியம் கடமையாற்றிவருவது தெரிந்ததே. [வெ]

# சைக்கிள் மீட்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சைக்கிள் திருடிய இருவரை பொலிசார் கைது செய்ததுடன், களவாடப்பட்ட சைக்கிள்களையும் மீட்டுள்ளனர்.

கொழும்புத்துறையைச் சேர்ந்த பி. பாலசுந்தரம் என்பவரது சைக்கிளும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கே. கேதீஸ்வரன் என்பவரது சைக்கிளும் திருடப்பட்டதாக யாழ் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவில் புகார் செய்யப்பட்டிருந்தது. குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் சார்ஜன்ட் எஸ். ஜோர்ஜ் தலைமையில் சென்ற கான்ஸ்டபிள்கள் கனகலிங்கம், பேரின்பநாதன், மூர்த்தி ஆகியோர் யாழ். 2ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஜூலியஸ் மைக்கல் என்பவரையும், யாழ். கொட்டடியைச் சேர்ந்த பழனி துரைரத்தினம் என்பவரையும் கைதுசெய்ததுடன், சைக்கிள்களையும் மீட்டுள்ளனர்

கொட்டடியில் கைதுசெய்யப்பட்டவரின் வீட்டில் களவாடப்பட்ட சைக்கிளின் பார் புதைக்கப்பட்ட நிலையில் பொலிசார் எடுத்தனராம். இவர் யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது 5 வருஷம் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருஷம் கடுங்காவல் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது (மா)

# தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

பாடசாலையில் வைக்கப்பட்டிருந்த இரு தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் இக் கொள்ளை நடந்தது.

இனந்தெரியாத 5 இளைஞர்கள் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி இரு தொலைக்காட்சிப் பெட்டிகளையும் கொள்ளை அடித்ததாக வல்வெட்டித்துறைப் பொலிசில் எம். பாலசுப்பிரமணியம் என்பவர் புகார் செய்துள்ளார். இக் கொள்ளை சம்பந்தமாகப் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (மா)

# வீடமைப்புக் கடன்

[மட்டுவில்]

பத்து லட்சம் வீடமைப்புக் கடன் வசதி சம்பந்தமான ஆரம்ப விழா தென்மராட்சித் தொகுதியில் சகல கிராமோதய சபைப்பகுதிகளிலும், மத ஆராதனைகளுடன் ஆரம்பமாகும் எனத் தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராஜா அறிவித்துள்ளார்.

இந்த ஆரம்ப விழா உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறும் வீடமைப்புத் திணைக்கள அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், விசேட சேவை அலுவலர்கள், கிராமோதய சபைப் பிரமுகர்களும் கலந்து கொள்வார்கள். தென்மராட்சித் தொகுதியில் 10லட்சம் வீடுகளுக்கான கடன் படிவம் வழங்கப்பட்டு அதற்கான ஆய்வுகளும் பூர்த்தியாகவுள்ளன.

### துப்பாக்கிகள் சீருடைகள் சிக்கின

# கட்டுவன் வீடொன்றில்

## கொள்ளைச்சந்தேக நபர்கள்

[மாவிட்டபுரம்]

பயங்கர ஆயுதங்கள் சீருடைகள் சகிதம் கட்டுவன் வீடொன்றில் வைத்து கைது செய்யப்பட்ட கொள்ளைச் சந்தேகநபர்கள் மூலம் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி வருவதாக பொலிஸ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 24ம் திகதி அதிகாலை 2-45மணியளவில் வசாவிளான் தெல்லிப்பழை வீதியில்ரோந்து சுற்றிவந்த காங்கேசன்துறை பொலிசார் கட்டுவன் என்னுமிடத்தில் சந்தேகத்திற்கிடமாக கார் ஒன்றும் மோட்டார் சைக்கிளொன்றும் வீதியோரத்தில் நிற்கக்கண்டனர்.

அவ்விடத்தில் பொலிசார் சோதனை மேற்கொண்ட சமயம் காரின் இலக்கத்தகடுகளில் வித்தியாசம் இருந்ததுடன் அவ்விடத்திலுள்ள வீடொன்றிலும் மின்வெளிச்சம் தெரியவே அவ்வீட்டுக்கு விரைந்தனர். அச்சமயம் அவ்வீட்டிலிருந்த சுமார் 10பேர்வரை ஓட்டம் பிடித்தனராம் அவர்கள் ஓடும் போது பொலிசாரை நோக்கி துப்பாக்கிபிரயோகம் செய்யவே பொலிசாரும் பதிலுக்குத் திருப்பிச்சுட்டனராம். ஓடியநபர்களை துரத்திச்சென்ற பொலிசார் மன்னாரைச்சேர்ந்த மதியழகன் என்னும் வாலிபரை பிடித்துக்கொண்டனர்.

பின்னர் மேற்படி வீட்டை சோதனையிட்ட சமயம் அங்கு துப்பாக்கி, கடற்படையினரின் சீருடைகள், பொலிசாரின் சீருடைகள் துப்பாக்கி, ரவைகள் என்பனவும் கொள்ளையடிக்கப்பட்ட உடுப்புகளும் காணப்பட்டன.

அவற்றை பொலிசார் கைப்பற்றியதுடன் அவ்வீட்டிற்குள் கை, கால் கட்டப்பட்டு கிடந்த புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த செல்வகுமார் என்பவரையும் கைதுசெய்தனர்.

மேலும் இதுபற்றி விசாரணைமேற்கொண்ட பொலிசார் இக்கொள்ளைக் கோஷ்டியைச்சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கரவெட்டியைச் சேர்ந்த சிவசோதி ஊறணியைச்சேர்ந்த செல்வமோகன் ஆகியோரைக் கைது செய்துள்ளனர்.

அத்துடன் புனிதன் என்னும் சந்தேகநபர் ஒருவரை பொதுமக்கள் பிடித்து பொலிசில் ஒப்படைத்துள்ளார்.

மேற்படி கொள்ளையர்கள் உபயோகித்ததாகக் கருதப்படு கொன்சல் கார் ஒன்றும் 2 மோட்டார் சைக்கிள்களும் பொலிசாரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

காரில் பின் பக்கம் 1 ஸ்ரீ 3586 என்னும் இலக்கமும் முன்பக்கம் ஈ. என், 4405 என்னும் இலக்கமும் காணப்படுவதுடன் மோட்டார் சைக்கிள்களிலும் இலக்கத்தகடுகளில் முரண்பாடு இருப்பதாக பொலிசார் தெரிவித்தனர்.

இந்நபர்களை விசாரணை செய்து வரும் பொலிசார் இவர்கள் மூலம் பல கொள்ளைச் சம்பவங்கள் துப்புத்துலக்கப்படும் என நம்புகின்றனர்.

இவர்கள் தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் பெயரைச் சொல்லியும் சீருடைகள் அணிந்து சென்றும் பல வீடுகளிலும் வர்த்தக ஸ்தாபனங்களிலிருந்தும் பெருந்தொகை பணம் நகைகளை கொள்ளையடித்துள்ளனர் என விசாரணைகளின்மூலம் தெரிய வந்து கொண்டிருக்கிறது.

இவர்கள் பெரிய கோஷ்டியாக இயங்குவதாகவும் ஒவ்வொரு இடங்களிலும் முகாமிட்டிருந்து தமது கைவரிசையைக் காட்டி வந்ததாகவும் இந்த வகையில் தற்போது கட்டுவனில் இவர்கள் தங்கியிருந்ததாகவும் இவர்கள் தம்மை அகதிகள் என்று கூறி வீடுகளை வாடகைக்கு எடுத்துக் கொண்டதாகவும் வாடகைக்கு எடுத்த வீடுகளுக்கு மிக அதிக முற்பணம், வாடகை கொடுத்து வந்ததாகவும், இவர்களை தீவிரவாத இளைஞர் இயக்கத்தினர் எச்சரித்ததாகவும் கூறப்படுகிறது.

இக் கொள்ளையர்களுடன் சம்பந்தப்பட்ட இரு பெண்மணிகளும் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி திரு. ஆர். எஸ். ஜெயபாலன், சார்ஜன்ட் வி. தியாகராஜா, கான்ஸ்டபிள்கள் அந்தோனிப்பிள்ளை, செபஸ்தியன் அகஸ்தீன் ஆகியோர் இது தொடர்பாக விரிவாக விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

---

### ஜனாதிபதி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திகதி நடைபெறும் சர்வகட்சி மகாநாடு குறித்து தங்களது கருத்துக்களை இக்குழுவினர் விளக்கமாகத்தெரிவித்தபோது ஜனாதிபதி மிகுந்த அக்கறையுடன் கேட்டுக்கொண்டதாக இக்குழுவின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

உத்தேச பிராந்திய சபைகள் குறித்து முஸ்லிம்கள் மதியில் பல கருத்துக்களை நடத்தியதாகவும், சில இடங்களில் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் வடக்கு வடக்கு-கிழக்கு இணைவதை கிழக்கு மாகாண மக்கள் சிறிதளவும் விரும்பவில்லை என்றும் ஜனாதிபதியிடம் இக்குழுவினர் அழுத்தமாகத் தெரிவித்தனர்.

ஜனாதிபதி கூட்டும் சர்வகட்சி மகாநாட்டில் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் அழைக்கப் படவேண்டும் என்று இக்குழுவினர் வலியுறுத்தியதை ஜனாதிபதி மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டதாகத் தெரியவருகிறது.

முஸ்லிம் சமூகப் பிரதிநிதியாக பிரதி அமைச்சர் ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீத் அழைக்கப்படலாம் என்று இக்குழு யோசனை தெரிவித்தாகவும் அறியப்படுகிறது.

---

### மினிபஸ்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது.

மினி பஸ் முற்றாக சேதமடைந்துள்ளது.

யாழ். பொலிசார் விசாரணை நடத்திவருகின்றனர். விபத்துக்குள்ளான சைக்கிள் யாழ். பொலிசில் வைக்கப்பட்டுள்ளது. [கு]

---

### கொள்ளைச்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

லிஸ் அதிபர் ஆனந்தராஜா அச் செய்தியில் தெரிவித்தார்.

அவர் தெரிவித்த தகவலின் படி அண்மைக்காலச் சம்பவங்கள் பலவற்றில் போலித்துப் பாக்கிகளும். போலி ஆயுதங்களுமே கொள்ளையர்களால் பாவிக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

நீர்வேலியில் அண்மையில் நடந்த கொள்ளை முயற்சியும் சொந்த நலன் கொண்ட சிலரின் செயலென்றும் பொதுமக்கள் அக்கொள்ளையைத் தடுப்பதில் ஆர்வம் காட்டியதைத் தாம் பாராட்டுவதாகவும் பொலிஸ் அதிபர் தெரிவித்துள்ளனர்.

எதிர்காலத்தில் இதுபோன்ற கொள்ளைகளைப் பொதுமக்கள் பொலிசாருடன் சேர்ந்து முறியடிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார். (கி)

---

### தமிழ் மக்க---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி புள்ளநாயகம் 62 வயதில் கொழும்பிலுள்ள தமது இல்லத்தில் நேற்றுமுன்தினம் காலமானார். தமிழ் இளைஞர்களுக்காக நீதிமன்றங்களில் வாதிட்டவர். இறுதிக் கிரியைகள் இன்று கொழும்பில் நடைபெறுகின்றன.

திரு. ஆலாலசுந்தரம் தமது செய்தியில் ''தமிழ்த்தலைவர்களுக்கெதிரான ட்ரயல் அட்பார் வழக்கிலும் உரிமை வேட்கை கொண்டோர் நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லப்பட்ட சந்தர்ப்பங்களிலும் நீதிக்காக இனத்தின் விடுதலைக்காகசன்மானம் எதுவுமின்றி புனிதமான கடமையை செய்து முடித்தவர் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

### நீலன் அனுதாபம்

வட்டுக்கோட்டை முன்னாள் எம். பி. கலாநிதி நீலன்திருச்செல்வம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் ''சட்டத்துறையில் அவர் ஆற்றிய சேவை தமிழ்மக்கள் மறக்க முடியாதவை. மனித உரிமையின் அடிப்படையில் தமிழ் இளைஞர்களுக்கு அவர் ஆற்றியசேவை அளப்பரியது. இவரது இழப்பால் தமிழ் மக்கள் அனாதைகளாக்கப்பட்டு விட்டனர் என்றுதெரிவித்துள்ளார். [மா-கு]

---

### ஜி. வி. ஈ.---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புரைகளை அவர் வழங்கியுள்ளார்.

'சந்தேகத்துக்கிடமான முறையிலும், தேவையற்ற வகையிலும் பரீட்சை மண்டபங்களுக்கு வெளியே நடமாடுவோர் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்' என்று அவர் உத்தரவிட்டுள்ளார். (கி)

---

### 6 இளைஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லையில் சந்தேகநபர்கள் ஆஜரானார்கள். சந்தேகநபர்கள் சார்பில்சட்டத்தரணிகள் ஆர். விசுவநாதன், வி கனகசபாபதி, ரி. லிங்கராசா, கி. தனராஜசிங்கம், பா. தவபாலன் ஆகியோர் ஆஜரானார்கள் சந்தேகநபர்கள் பெற்றோர் பொறுப்பில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு ஒவ்வொரு வாரமும் பொலிஸ் நிலையத்தில் சமுகமளிக்கும்படி பணிக்கப்பட்டது.

---

### மன்னார்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிரட்டி டிப்போவில் பணம் வைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டியின் சாவியையும் கொண்டுவரச்செய்து தம்முடன் அவரை டிப்போவுக்கு கூட்டிவந்துள்ளனர்.

''வரும் வழியில் நபர் ஒருவரின் இருமல் சத்தம் கேட்கவே அச்சத்தம் வழியிலிருந்து தண்ணீர்தாங்கி யொன்றின் காவலாளியுடையது என்பதை அறிந்ததும் அக்காவலாளியையும் தம்முடன் அழைத்து வந்துள்ளனர்.

டிப்போவில் அன்றிரவு 17 பேர் உறக்கத்திலிருந்தனர். அவர்களையும் உதவிமுகாமையாளர் காவலாளி ஆகியோரையும் மிரட்டி அறையொன்றினுள் வைத்துப்பூட்டினர். பின்னர் பணப் பெட்டியைத் திறந்து 47 ஆயிரத்து 998 ரூபா 90சதத்தைக் கொள்ளையடித்தனர்.

கொள்ளையர்கள் அறைக்குள் வைத்துப் பூட்டப்பட்டவர்களிடம் காலை ஆறுமணிக்குப் பின்னரே இச்சம்பவத்தைத் தெரிவிக்கும்படி கூறிவிட்டுச் சென்றனராம். ஆனால் அறைக்குள்ளிருந்தவர்கள் காலை 5 மணியளவில் அபயக்குரல் எழுப்பியுள்ளனர். இதனைத் தொடர்ந்து பஸ் டிப்போவில் நிறுத்தப்பட்டிருந்த பஸ்வண்டிகளில் உறங்கிக்கொண்டிருந் டிப்போ ஊழியர்கள் அந்த அறைப்பகுதிக்குவந்தனர். தொடர்ந்து டிப்போ முகாமையாளரான பராக்கிரம சிங்கத்துக்கும், பொலிஸாருக்கும் தகவல்களைக் கொடுத்தனர். முகாமையாளரே நேரில் வந்து அறைக்குள்ளிருந்தவர்களை வெளியேற்றினார்''.

கொள்ளையர்கள் ரீசேட், காற்சட்டை அணிந்திருந்தனராம். முகத்தில் முகமூடி, தலையில் தொப்பி ஆகியனவும் போட்டிருந்ததுடன் பல்வேறு அளவுகளில் துப்பாக்கிகளையும் வைத்திருந்தனராம். இக் கொள்ளை பற்றி மன்னார் பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

### பிந்திய செய்தி

மன்னார் இ. போ. ச. டிப்போ கொள்ளைச்சம்பந்தமாக டிப்போ உதவி முகாமையாளர் கே. நவரத்தினம் விசாரணைக்காக தள்ளாடி இராணுவமுகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி-மா)

---

### அனாதரவாகக்கிடந்த

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

துறைப் பொலிசாருக்கு இது பற்றித் தெரியப்படுத்தினர்.

இந்த மோட்டார் சைக்கிளை காங்கேசன்துறைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளார்.

இம்மோட்டார் சைக்கிளில் பல முக்கிய பாகங்கள் காணப் படவில்லை.

---

### ராணுவம்---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

போது பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் துப்பாக்கிக் குண்டுக்கு இலக்காகி மரணமானார்.

ஜீப்பின் முன் ஆசனத்திலிருந்த இன்ஸ்பெக்டர் பாய்ந்து ஓடியதால் காயங்கள் எதுவுமின்றித் தப்பிவிட்டார்!

பின் ஆசனத்தில் இருந்த மற்றும் மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மூவரும் கடும் காயத்துக்குள்ளாகி திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். திருகோணமலை ஆஸ்பத்திரியை கடற்படை வீரர்கள் காவல் புரிகின்றனர்.

பிரட்றிக் கோட்டையில் காவல் முடித்து தனது தங்குமிடத்துக்குப் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சென்றபோது அவரை வழிமறித்து ராணுவ வீரர்கள் நையப்புடைந்தார்களாம். இதனை அடுத்து இந்தக் கான்ஸ்டபிள் தனக்கு நேர்ந்த கதிகுறித்து திருமலை பொலிஸ் அதிபரிடம் தெரிவித்தாராம்.

இதனைத் தொடர்ந்தே பொலிஸ் கோஷ்டி பிரட்றிக் கோட்டைக்கு சம்பவம் தொடர்பாக இராணுவத் காப்டனுக்குப் புகார் செய்யச் சென்றது என்றும் அப்போது தான் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது என்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் மரணமானார் என்றும் தெரிவிக்கப் பட்டது.

உயர் மட்ட விசாரணை ஸ்தலத்தில் நேற்று நடந்தது.

பொலிஸ் மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம், ராணுவத்தளபதி திஸ்ஸவீரதுங்கா, வடமத்திய பிராந்திய டி. ஐ. ஜி. மித்ரா ஆரியரத்தின ஆகியோர் ஸ்தலத்தில் விசாரணைகளை நடாத்தினர்கள்.

---

### கடலுக்குள்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தது!

மிகவும் பரிதாபகரமான முறையில் இறந்து விட்டார். தெல்தெனியாவைச் சேர்ந்த தர்மராஜா, பின் ஆசனத்திலிருந்த கான்ஸ்டபிள் விநாயகமூர்த்தி காயங்களுடன் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆர். ஆர். மகேந்திரன் ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

---


## மரண அறிவித்தல்

### அருட்திரு. B. சூசைப்பிள்ளை

யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு B. சூசைப்பிள்ளை அடிகளார் காலமாகிவிட்டார். அவரது நல்லடக்கம் யாழ். புனிதமரியாள் பேராலயத்தில் நாளை 28ம் திகதி புதன்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு நடைபெறும்.

10803



## மரண அறிவித்தல்

### பிரம்மஸ்ரீ சபேச சர்மா தியாகராசக் குருக்கள்

கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தைச் சேர்ந்த தியாகராசக் குருக்கள் புவனேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் பிரம்மஸ்ரீ சபேச சர்மா 26-12-83-ல் சிவபதமடைந்து விட்டார். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கா. தியாகராசக் குருக்கள்
சிவன்கோவிலடி, கீரிமலை.

10802


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] வீதி, 65-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O.Box: 49, Telephone: 22389 — 24126.